# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 26 திங்கட்கிழமை (10-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:104


# ரஷ்யாவிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணை வாங்குவதற்கு விடுதலைப் புலிகள்முயற்சியாம்!

## அந்நாட்டுத் தூதுவர், வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல்

கொழும்பு, மார்ச்10

ரஷ்யாவிலுள்ள ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்றிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணை உட்பட அங்குள்ள பல நவீன ரக ஆயுதங்களை வாங்குவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவர் மிக்கெய்ல் ஜி கார்போவ் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு உத்தியோகப்பற்றற்ற அறிக்கை (Non Paper) மூலம் அறிவித்திருக்கிறார்.

இந்த அறிக்கையில் ரஷ்யத் தூதுவர் மேலும் பல விரைங்களைத் தெரிவித்திருக்கிறார்.

அவை வருமாறு:-

ரஷ்யாவின் லாவோஸ் நகரிலுள்ள தூதரகத்துக்கு கிடைத்த தகவல்களின்படி, கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி இரண்டு இலங்கைப் பிரஜைகள் ரஷ்யாவிலுள்ள ஆயுதத் தொழில்நுட்பக் கூட்டு நிறுவனமான 'றோஸ் பொறோனோ எக்ஸ்போரட்டின' பிரதிநிதி ஒருவரை தொடர்பு கொண்டனர். கையில் தாங்கிச் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய சிறியரக ஆயுதங்கள், தோளில் வைத்துத் தாக்கக்கூடிய விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதி,

(14ஆம் பக்கம் பார்க்க)

# தற்போதைய அமைதிச் சூழலை மேலும் உறுதி செய்ய வேண்டும்!

## வவுனியா சென்ற அமைச்சர் பீரிஸ் முப்படையினர் மத்தியில் தெரிவிப்பு

வவுனியா,மார்ச்10

**தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைதிச் சூழல் நூறு வீதம் நம்பகத்தன்மையானது என்று கூறமுடியாது. இனி ஒரு யுத்தம் மூண்டால் அது இந்நாட்டின் இறுதி அழிவாகவே இருக்கும். அதைத்தடுப்பதற்கு தற்போது கைகூடியுள்ள நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.**

**- இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று வவுனியாவில் தெரிவித்திருக்கிறார்.**

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுப் பகல் விசேட ஹெலிகொப்டர் மூலம் வன்னி இராணுவத் தலைமையகத்தை வந்தடைந்தார். அங்கு அவர் இராணுவம், பொலீஸ்,விமானப்படை, கடற்படை அதிகாரிகளுடன் உயர்மட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

அதன்பின்னர், அங்கு முப்படையினர், பொலீஸார் மத்தியில் அவர் உரையாற்றினார். அப்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நிலையான சமாதானம் ஒன்று ஏற்பட்ட பின்னர் இராணுவத்தினர் எவரும் சேவையில் இருந்து நீக்கப்படமாட்டார்கள். இது குறித்து படையினர் கவலைகொள்ளத்தேவையில்லை. இப்போது படையினருக்கு அரசு வழங்கும் சகலதும் பின்னரும் தரப்படும்.

யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொலையாளியிடமிருந்து விநோதினி குடும்பத்தவருக்கு தொடர்ந்து கொலை மிரட்டல்!

'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகை விளம்பரப் பொறுப்பாளருள் ஒருவரான விநோதினி திலீபனைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்தவர் என்று கருதப்படும் கொலையாளியிடமிருந்து விநோதினியின் குடும்பத்தவருக்குத் தொலைபேசி மூலம் தொடர்ந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான பொலீஸ் நடவடிக்கைகள், விசாரணைகள் அனைத்தும் உடன் நிறுத்தப்படவேண்டும் இல்லையேல் அடுத்த இலக்கு விநோதினியின் தாயார்தான. அவரைக் கடித்துக் குதறுவோம். - என்ற சாரப்பட அச்சுறுத்தல்கள் அவர்கள் வீட்டுக்கு வந்தவண்ணம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

விநோதினி மரணத்தை ஒட்டி துக்கம் விசாரிப்பதற்கு அமைச்சர் பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் நேற்றுமாலை மரண வீட்டுக்கு வந்திருந்த சமயம் மூன்றாவது மிரட்டல் தொலைபேசி அழைப்பு வந்ததாகக் கூறப்படுகின்றது.

விடயத்தை அறிந்துகொண்ட அமைச்சர் சந்திரசேகரன் உடனடியாக ஊடகத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காருடன் தொடர்பு கொண்டார். அதையடுத்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களுக்கான தமிழீழ வைப்பகக் கிளை

### அடுத்தவாரம் பளையில் திறந்து வைக்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்10

குடாநாட்டு மக்களுக்கான தமிழீழ வைப்பகத்தின் கிளை அடுத்தவாரம் முதல் பளை நகரில் இயங்கவுள்ளது.

பளைப் பிரதேசத்துக்கான தமிழீழ வைப்பகக் கிளையும் அங்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இரண்டு வைப்பகக் கிளைகளையும் உள்ளடக்கிய கட்டடத்தொகுதி எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நணபகல் கோலாகலமாகத் திறந்துவைக்கப்படும்.

குடாநாட்டு மக்களுக்கான வைப்பகக் கிளை கடந்த 95ஆம் ஆண்டு இறுதிவரை யாழ்.நகரில் கன்னாதிட்டிப் பகுதியிலும் இடம்பெயர்வின் பின்னர் சாவகச்சேரி, மல்லாவி ஆகிய இடங்களிலும் இயங்கிவந்தது.

இதுவரைநாளும் மல்லாவியில் இயங்கிய கிளையே பளைப் பகுதிக்கு மாற்றப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வலுவிழந்தோருக்கான பயிற்சிப்பட்டறையின்போது ஜனாதிபதியின் சகோதரி சுனேத்ரா பண்டாரநாயக்க வலுவிழந்த சிறுவருடன் அளவளாவுவதைப் படத்தில் காணலாம். *(படம்: பத்மராஜ்)*

## வவுனியாவில் உயர் பாதுகாப்பு வலயத்திலும் மீள் குடியமர்த்தல்

### இராணுவத்தினர், புலிகள் கூடிப்பேசி முடிவு

வவுனியா,மார்ச்10

வவுனியா மாவட்டத்தில் போரினால் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை இன்றுமுதல் ஆரம்பிப்பதென வவுனியா செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்டக்கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் தாண்டிக்குளம், ஓமந்தை ஆகியவற்றின் சில பகுதிகளிலும் மக்களை மீளக் குடியமர்த்த இக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வன்னி

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைச் சிறையில் இந்திய மீனவர் இராமேஸ்வரத்தில் பதற்றம் நீடிப்பு!

### மீனவர்கள் போராட்டத்துக்கு முஸ்தீபு

இராமேஸ்வரம்,மார்ச்10

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 46 பேரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றால் போராட்டம் தீவிரமடையும் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 118 மீனவர்களும், நாகபட்டினத்தைச் சேர்ந்த 21 மீனவர்களும் அடுத்தடுத்து கடந்த வாரம் இலங்கை மீனவர்கள் மற்றும் கடற்படையினரால் பிடிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவத்தைத் தொடர்ந்து 93 மீனவர்கள் கடந்த 6 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள எஞ்சிய 46 மீனவர்களும் ஐந்து நாள்களில் விடுவிக்கப்படுவார்கள் என்று இராமநாதபுரம் மாவட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு: செயலகம் முன்பாக இன்று ஒரு மணிநேரம் மறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்10

தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் யாழ். செயலகம் முன்பாக அடையாள மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

முற்பகல் 10.30 மணி முதல் ஒரு மணி நேரத்துக்கு இப்போராட்டம் இடம்பெறும்.

தென்பகுதிச் சிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழக கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துமே இன்று அடை

(14ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLiNK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

# யார் போடுவார் அணை?



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களில் தொடர்ச்சியாக 13 வெற்றிகள்; 14ஆவது வெற்றியும் சாத்தியமாகலாம்; இதுவே தொடர்ந்தால் கிண்ணம் அவர்கள் கைகளில் என்பது மட்டும் நிச்சயம். அவர்கள் யார் என்பது சொல்லாமலே புரிந்திருக்கும்.

வெற்றி மேல் வெற்றி என்று வீறுநடை போடும் ஆஸ்திரேலியாவுக்கு அணைபோடப் போவது யார்? இப்போது மிகமிக முக்கிய கேள்வி இதுதான். அணை போடப்படவில்லை என்றால் கிண்ணம் அவர்களுக்கு என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியா ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றாயிற்று. இனி வெற்றிகள் அவர்களுக்கு அவசியமில்லை. ஆனால், தோற்பதற்கு அவர்கள் தயாராயில்லை. அவர்களை அச்சுறுத்துவதற்கு எந்த அணியும் இப்போது பலத்துடன் இல்லை.

இனி யாராவது, எந்த அணியாவது வீறு கொண்டாக வேண்டும். இல்லையேல் மூன்றாவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஒரே நாடு என்ற சாதனை அவர்கள் படைப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிவரும்.

'சுப்பர் சிக்ஸி'ல் ஆஸ்திரேலியாவுக்கு இன்னும் இரண்டு ஆட்டங்கள் எஞ்சி இருக்கின்றன. கென்யாவை அவர்கள் ஊதித் தள்ளிவிடாவிட்டால தான் அதிசயம். நியூஸிலாந்தும் அவர்களுக்குத் தலைபிடி கொடுக்கக் கூடியவர்கள் என்று கருதுவதற்கில்லை. ஆனால், இங்கிலாந்துடனான ஆட்டத்தில் சற்றே திணறியது போன்று, இருவரும் வெள்ளையர்கள் என்ற கார

(13ஆம் பக்கம் பார்க்க)

# இன்னும் ஏன் இவர்?

1999 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டிகளில் இலங்கை அணி படுதோல்வி அடைந்தது. அதன் பின்னர் அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அணியல் பல இளம் வீரர்களுக்கு இடமளிக்கப்பட்டது. தலைமைத்துவத்திலும் மாற்றம் செய்யப்பட்டது. சனத் ஜயசூரிய தலைவராகவும் உப தலைவராக மஹேல ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டனர். மஹேலவின் ஓட்ட சராசரி 31 இற்கும் மேலே. தனிப்பட்ட ரீதியில் அவர் திறமையான வீரர்தான். கடந்த காலங்களில் அவர் சிறப்பாகவே செய்திருந்தார். ஆனால், சிறிது காலத்தின் பின்னர் மஹேலவின் ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. இதை அடுத்து அவரின் உப தலைமையை தேர்வாளர்கள் பறித்துவிட்டனர்.

ஆனால், மஹேலவின் ஆட்டம் தற்போது மிக மிக மோசம். 'முருக்கு பருத்து தூணுக்கு உதவாது' என்பதைப் போல மஹேலவும் தனது சரீரத்தை நன்றாகக் கவனிக்கின்



ஜெயவர்த்தனாவை வாத்து (டக்) ஆக்கிய மகிழ்ச்சியில் பிரட் லீ.

றாரே தவிர துடுப்பாட்டத்தை கவனிப்பதாகக் காணோம். இவர் அணியில் இருந்து என்ன பயன் என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி. இவரைத் தொடர்ந்தும் அணியில் வைத்திருந்தால் இன்று நடக்கும் ஆட்டத்திலும் தொடர்ந்து வரும் ஆட்டங்களிலும் இலங்கை அணி தோல்வியை தழுவுவது என்னவோ நிச்சயம்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# பாக். அணியின் பயிற்றுநர் விலகல்

"பாகிஸ்தான் அணிக்கு உள்நாட்டு பயிற்றுநர் ஒருவர் தேவை. நான் தொடர்ந்து பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக நீடிக்கமாட்டேன்."

- இவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக இருந்த தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் பைபஸ் கூறியுள்ளார்.

இது குறித்து ரிச்சர்ட் பைபஸ் பேட்டியொன்றில் கூறியிருப்பதாவது :-

"பயிற்றுநர் என்ற முறையில், பாகிஸ்தான் அணியின் திறமையை முன்னேற்ற என்னால் முடியவில்லை.

"இது என்னை மிகவும் வருத்தமடையச் செய்துள்ளது. தவறு என்னிடமா? அல்லது வீரர்களிடமா? எனக்குத் தெரியவில்லை. பாகிஸ்தான் அணி முன்னேற்றம் அடைந்துள்ளது என்று நான் நினைக்கவில்லை.

"உலகக் கிண்ணத்தோடு என்னுடைய பயிற்றுநர் ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டது. என்னுடைய பயிற்றுநர் பதவியை நீடிக்குமாறு நான் கோரமாட்டேன்." - என்றார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற பாகிஸ்தான் அணி, இம்முறை ஆஸ்திரேலியாவிற்குச் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முதல்

(13ஆம் பக்கம் பார்க்க)

# SHARP Action of the day



பிரட் லீயின் பந்து தாக்கியதில் காயமடைந்த ஜயசூரியா குணமாகி வருகின்றபோதும் இன்றைய ஆட்டத்தில் தான் பங்கு பற்றுவது 80 வீதமே சாத்தியமாகும் என்று நேற்று தெரிவித்தார்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns

# டெண்டுல்கர் என் இலக்கு அல்ல வெற்றிக்கு உதவுவதே முக்கியம்



## முரளி தெரிவிப்பு

கேப்டவுன்,மார்ச் 10

இந்திய அணியுடனான ஆட்டத்தில் உலகின் மிகச் சிறந்த துடுப்பாளரான சச்சின் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்வது என்பது என் இலக்கு அல்ல. எனது அணி வெற்றி பெற உதவுவதே எனது நோக்கம் என்று இலங்கையின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"சச்சின் பந்துகளைக் கையாள்வதில் வல்லவர். பந்துவீச்சாளரின் கைகளில் இருந்து பந்து வெளிப்பட்டதும் அவர் எப்போது வெளியே வந்து தூக்கி அடிப்பார் என்பதைக் கூறமுடியாது" - என்றார் முரளி.

"டெண்டுல்கருக்கும் இந்திய அணியின் ஏனைய வீரர்களுக்கும் பந்து வீசுவது மிகவும் சவாலானது. இலகுவில் எவரையும் இலக்கு வைக்க முடியாது. அவர்கள் அனைவரும் சிறந்தவர்கள். என்னுடைய இலக்கு, இந்திய அணிக்கு அதியுயர் நெருக்கடியை வழங்குவதே.

"நான் 4 அல்லது 5 இந்திய விக்கெட்டுக்களை வீழ்த்தினால் இலங்கை அணியின் வெற்றிக்கு உதவ முடியும். அது எனக்கு மகிழ்ச்சியானது" - என்று முரளி மேலும் சொன்னார். இதேவேளை -

உலகக் கிண்ணத் தொடரின் ஆரம்பவிழாவின் போது சந்தித்த முரளியும் டெண்டுல்கரும் பேசிக்கொண்ட போது,

(13ஆம் பக்கம் பார்க்க)

# செய் அல்லது செத்துமடி!

கிரிக்கெட் உலகக்கிண்ணத் தொடரின் மிகவும் பரபரப்பான ஆட்டம் இன்று தென்னாபிரிக்காவிலுள்ள ஜொகான்னஸ்பேர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தியா - இலங்கை இடையிலான ஆட்டம் அது. இலங்கைப் பயிற்றுநர் வட்மோரே சொல்லி விட்டார் இது எங்களுக்கு செய் அல்லது செத்துமடி என்கிற ஆட்டம் என்று.

உலகக்கிண்ணப் போட்டியின் அரையிறுதிக்கு செல்வதற்கு இந்த ஆட்டம் இரு அணிகளுக்கும் மிக முக்கியமானது. இலங்கையைப் பொறுத்தவரை எப்பாடுபட்டாவது இன்றைய ஆட்டத்தில் வெல்ல வேண்டும். 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்கு வரும் போது 7.5 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தில் இருந்து இலங்கை இப்போது - ஆஸ்ரேலியாவுடனான ஆட்டத்தின் பின்னர் 5ஆது இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. இனிவரும் இரண்டு ஆட்டங்களிலும் வென்றாலே அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பு இலங்கைக்கு கைகூடும்.

இன்றைய போட்டியில் இவ்விரு அணிகளும் சமபலம் கொண்டவையாகவும், உலகத்தில் தலை சிறந்த பந்து

(13ஆம் பக்கம் பார்க்க)





# நியூஸிலாந்துடனும் சைமன்ஸ் ஆடமாட்டார்

போர்ட் எலிசபெத்,மார்ச்10

ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அன்ரூ சைமன்ஸ் நாளை நடைபெறவுள்ள நியூஸிலாந்துடனான ஆட்டத்தில் பங்கேற்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த சைமன்ஸ் நேற்று முன்தினம் நடந்த இலங்கையுடனான ஆட்டத்திலும் பங்கேற்கவில்லை. சைமன்ஸின் காயம் தற்போது குணமாகி வருகின்றது. நேற்று அவர் தகுதி காண் பரீட்சைக்கும் உட்படுத்தப்பட்டார். ஆனால், அவரது விடயத்தில் கவனமாக நடந்துகொள்ள ஆஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

"அவர்(சைமன்ஸ்) தற்போது நன்கு தேறிவருகின்றார். ஆனால், அவரை செவ்வாயன்று நடைபெறும் ஆட்டத்திலும் பங்குபற்ற அனுமதிப்பதில்லை என்று நாம் தீர்மானித்துள்ளோம். அவர் நன்கு குணமடைந்ததும் எதிர்வரும் சனியன்று நடக்கும் கென்யாவுடனான ஆட்டத்தில் விளையாடுவார்" - என்று ஆஸி. அணியின் மருத்துவர் தெரிவித்தார். (ம)

SHARP
நத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1s, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# கைதிகள் எழுந்து நடமாட முடியாத நிலை! ஒருவர் வைத்தியசாலையில்; மூவர் மயக்கம்

கொழும்பு,மார்ச்10

களுத்துறைச் சிறைச்சாலையில் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க்கைதிகள் எழுந்து நடமாடமுடியாத நிலையில் இப்பொழுது இருக்கின்றனரென சிறைச்சாலை வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள 63 தமிழ்க்கைதிகளில் 56 பேர் கடந்த 10 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே.

உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்ட ஒருவர் நாகொடா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மயக்க நிலையில் உள்ள 3 கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலை மருத்துவப்பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் இருதய தாக்கம் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார். மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் கைதிகள் தொடர்பாக சட்டமா அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்த ஹர்ஷா பெர்னாண்டோவுக்கு இன்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளார்.(ஐ)

# அக்குரஸ்ஸ பி.சபைத்தேர்தல்:
# 10 ஆசனங்களுடன் பொ.ஐ.மு. வெற்றி
## ஜே.வி.பிக்கு 6; பூமிபுத்ரவுக்கு 5!

மாத்தறை,மார்ச்10

அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 15 ஆயிரத்து 84 வாக்குகளை பெற்று வெற்றிபெற்றுள்ளது.

21 உறுப்பினர்கள் கொண்ட பிரதேச சபையில் பொ.ஐ.முன்னணிக்கு 10 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இருப்பினும் பெரும்பான்மைப்பலம் கிட்டவில்லை.

ஜே.வி.பி. 11 ஆயிரத்து 538 வாக்குகளைப்பெற்று 6 ஆசனங்களையும், சிங்களயே மஹா சம்மத பூமிபுத்ர கட்சி 10 ஆயிரத்து 381 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்களையும் கைப்பற்றின.

அக்குரஸ்ஸ பிரதேச சபை தேர்தல் முடிவுகள் வருமாறு:-

பொ.ஐ.மு. - 15084 - 10 ஆசனங்கள்.

ஜே.வி.பி. - 11538 - 6 ஆசனங்கள்

சி.ம.பூ.பு.க - 10381 - 5 ஆசனங்கள்

56 ஆயிரத்து 138 மொத்த வாக்காளர்களில் 39 ஆயிரத்து 355 பேர் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வாக்களித்தனர். அவற்றில் 2352 வாக்குகள் செல்லுபடி அற்றவை ஆகும்.

தபால்மூல வாக்குகளில் பொ.ஐ.முவுக்கு 232 வாக்குகளும் ஜே.வி.பி.க்கு 152 வாக்குகளும் பூமிபுத்திர கட்சிக்கு 119 வாக்குகளும் கிடைத்தன.

(ஐ)

# பட்டப்பகலில் பலர் முன்னிலையில் கல்முனையில் கோரச் சம்பவம்!
## விசேட அதிரடிப்படை அதிகாரியின் வாய் கிழிக்கப்பட்டது

வெள்ளாவெளி விஷேட அதிரடிப்படை முகாமைச்சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் பிரதீப் குமார கடந்த வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் பலர் முன்னிலையில் கல்முனை மக்கள் வங்கிக்கு முன்னால் - கல்முனை பொலீஸ் நிலையத்துக்கு சுமார் 100 மீற்றர் தூரத்தில் - வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டார். அவருடைய வாய் கிழிந்தது. களுத்தில் பல குத்துக்காயங்கள். தலையின் பின்புறத்தில் கடுமையாக அடிபட்டு காயம் ஏற்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கானவருடன் வந்த விஷேட அதிரடிப்படையினர் இருவரும் காவல் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் எவ்வளவோ முயன்றும் தாக்குதல் நடத்திய நபரை அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

அவர் மீது ஒருமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்து பார்த்தனர். சூடு விழுந்ததும் ரத்தம் வழிய அவர் முன்னரை விட ஆவேசம் கொண்டு 4 பேரையும் தூரத்தி விட்டு ஏற்கனவே தாக்குதலுக்கு இலக்காகி நிலத்தில் வீழ்ந்து கிடந்த இன்ஸ்பெக்டர் மீது உட்கார்ந்துகொண்டு அவரை மேலும் தாக்கினார்.

அருகே உள்ள பஸ் நிலையத்திலும் வீதியிலும் அதைப் பார்த்தவர்கள் பதறிப்போனார்கள். காப்பாற்ற வழியில்லையே என்ற இரக்க உணர்வு ஒருபுறம். அச்சம் மறுபுறம் செய்வதறியாது திகைத்தனர்.

தாக்குதல் நடத்தியவர் கல்முனையைச் சேர்ந்த 26 வயதுடைய மீரா சாய்பு முசாதீக் என்று அழைக்கப்படும் இளைஞர் ஆவார். இவர் ஒரு மனநோயாளி என்றும் கூறப்படுகிறது. தாக்குதலுக்கு இலக்கானவர் வெள்ளாவெளி விஷேட அதிரடிப் படைமுகாமைச் சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் என்றும் பெயர் பிரதீப் குமார என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

மற்றவர்களை விட்டுவிட்டு இவர் மட்டும் ஏன் தாக்கப்பட்டார் என்ற விவரம் எவருக்கும் தெரியவில்லை.

பொலீஸ் நிலையத்திற்கு சமீபமாக எவ்வளவோ சம்பவங்கள் நடந்தும் துப்பாக்கிச்சூட்டு சத்தம் கேட்டும் கல்முனைப் பொலீஸார் நிலையத்தை விட்டு வெளியே வரவில்லை. (ஐ)

## 'மனவெளி' அனுபவப் பகிர்வு

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் 'மனவெளி' கலை இலக்கிய அனுபவப் பகிர்வு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தி அருகே உள்ள ஒன்றிய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் அனுபவப் பகிர்வு வழங்குவார். (ஒ)

### மட்டு - அம்பாறை தொண்டர் ஆசிரியர்
# சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்துக்குத் திட்டம்

கொழும்பு,மார்ச்10

சுழற்சி முறையிலான உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டு வரும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் தொண்டர் ஆசிரியர்கள் தங்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர்.

நிரந்தர சமாதானம் வழங்குமாறு கோரி இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று ஏழாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆரம்பத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தை மேற்கோண்டிருந்த இவர்கள், கடந்த வியாழன் முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். (ஐ)

# கணக்கியல் கற்கைநெறிக்கு லண்டன் நிறுவக அங்கீகாரம்

தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆண்டு காலக் கற்கை நெறியை நிறைவுசெய்தவர்களுக்கு லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகத்தின் அங்கீகாரம் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. இதன்மூலம் மேற்படி கற்கைநெறியை நிறைவு செய்தவர்கள் லண்டன் நிதியியல் கணக்காளர்களாக அனுமதிக்கப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியானோரை உறுதிப்படுத்தும் நடவடிக்கை இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறும் என்றும் -

லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இந்த இருநாள்களிலும் மாணவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்குவார் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, என்.சி.ஏ.பி. கற்கைநெறி முடித்தவர்கள் லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகப் பரீட்சைக் குழுமத்தின் நிதியியல் தொழில்நுட்பவியலாளராகவும் ஐ.ஏ.பியின் கூட்டிணைக்கப்பட்ட கணக்குப் பதிவாளராகவும் அங்கீகரிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஒ)

## பிரதேச செயலரின் அறிவுறுத்தல்

ஊர்காவற்றுறை,மார்ச்10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல நோ.கூட்டுறவுச் சங்க கிளைகள் உட்பட உணவுக் களஞ்சியத்திலுள்ள உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதற்கு முன் அவை பாவனைக்கு உகந்தவையா? எனப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரினால் சுகாதாரப் பகுதியினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது விடயம் குறித்து ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-16)


2003.03.14ஆம் நாள் முதல்....
பளை நகரிலும் தன் பணி தொடங்குகின்றது
தமிழீழ வைப்பகம்
உங்கள் வளமான வாழ்விற்கான பல்வேறுபட்ட மேம்பட்ட சேவைகளுடன்
உங்கள் நம்பிக்கையின் சின்னம்
உங்கள் அருகில் உங்கள் தெரிவில் உங்களிற்காகவே
தமிழீழ வைப்பகம்
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 16 - 04 - 1924

உதிர்வு 08 - 02 - 2003

## அமரர் சரவணை சின்னத்துரை

பதைபதைத்துப் பாரினிலே நாமெல்லாம் பதறியழப்
பார்க்காமல் பாரைவிட்டுச் சென்றதேனோ ஐயா?
வெளிச்சம் பெறுவதற்காய் விளக்கை ஏற்றி
வெளிப்படுத்தாமல் அமைதியாய் சென்றதேனோ ஐயா?
ஒரு மாதமென்ன ஓராயிரம் மாதங்களானாலும்
ஆறாது எம் சோகம்! அகலாது உங்கள் நினைவுகள்!

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.03.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சந்திரபுரம், மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.* (15392)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 - 07 - 1934

விண்ணில் 22 - 02. - 1999

## அமரர் சண்முகம் சோமசுந்தரம்

*(முன்னாள் உதயன் பத்திரிகை முகவர்)*

குஞ்சர்கடை, கரணவாய்

திதி: 10.03.2003

எங்கள் அன்பு அப்பாவே!
உங்கள் இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையில்
நாங்கள் உறுதியுடன் செல்லுகின்றோம்.

*உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நீலன்குளத்தாள் லேன்,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (15282)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நுணாவில் சந்தியில் 15வீடுகளில் மக்கள் மீளக் குடியமர்வு

தென்மராட்சி,மார்ச்10

நுணாவில் சந்தியில் நிலை கொண்டிருந்த படையினர் அங்குள்ள வீடுகளிலிருந்து படிப்படியாக வெளியேறி வருவதையடுத்து சம்பந்தப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

நுணாவில் சந்தியில் மூன்று பக்கங்களில் படையினர் நிலைகொண்டிருந்ததால், 25இற்கு மேற்பட்ட வீடுகளில் மக்கள் மீளக்குடியமர முடியவில்லை.

எனினும், தற்போது கைதடி நுணாவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பாரிய முகாமுக்கு இந்த வீடுகளில் நிலைகொண்டிருந்த படையினர் படிப்படியாக நகர்த்தப்படுவதை அடுத்து நுணாவில் சந்தியிலிருந்த 15 வீடுகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். (எ-117)

# சீருடை முத்திரை விநியோகம்

சாவகச்சேரி கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாணவர்களுக்கான இலவச சீருடை முத்திரைகள் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வழங்கப்படும்.

அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் மாணவர் அல்லது குடும்ப உறுப்பினர் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் சி.தில்லையம்பலம் தெரிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடை முத திரைகள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் -

சீருடைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் பெற்றோர்கள் சீருடைக்கான முத்திரைகளை தத்தம் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-173)

# விவசாயிகள் விவரம் வரணியில் சேகரிப்பு

பட்டினிக்கு எதிரான நிறுவன அதிகாரிகள் குழு ஒன்று கடந்த 5ஆம் திகதி நாவற்காடு, மாசேரி, கரம்பைக்குறிச்சி, குடமியன் ஆகிய கிராம சேவையாளர் பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியது. இந்தச் சந்திப்பில் மேற்படி பகுதிகளில் வசிக்கும் மேட்டுநில விவசாயிகளின் விவரங்கள் திரட்டப்பட்டன.

விவசாய உள்ளீடுகள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (எ-170)




# தேவை

கணக்குப் பதிவாளர்
**BOOK KEEPER**

கணக்கு பதிவாளர் பதவிக்கு கணனி அறிவுடன் கூடிய திருமணமான பெண் விரும்பப்படுகின்றது.
முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

நேர்முகப்பரீட்சை 13.03.2003 வியாழக்கிழமை

**THE PENINSULA GROUP**
127/10, TEMPLE ROAD, JAFFNA.
T.P.: 021 222 3720 (சி-26856)

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



## திருமதி டார்வின் வீரா குமுதினி

அன்னை மடியில் 01-11-1976

ஆண்டவன் அடியில் 10-03-2002

வருடவரும் தென்றலதுவும்
வன் தீயாய் தகிக்குதம்மா! - உன்
வாஞ்சையிலே சிறு மழலை
வழி தேடி அழுகுதம்மா!

பால்யம் மாறு முன்னே
பப்பாவைப் பறி கொடுத்தாய் - ஏன்?
ஈன்ற நின் பிஞ்சை தினம்
ஈர விழி நனைய வைத்தாய்!

சீலமயிலே வாழ்வதற்கும்
சிறு பொழுதோ கணக்கு வைத்தாய் - உன்
பிஞ்சைக் கணவனுக்கோ
பிரியாவிடைப் பரிசளித்தாய்!

பாவம் உன் அன்னை உடன் பிறந்தோர்
பாவியர் தவிக்கின்றோம் - புவியில்
வாழும் காலம் மட்டும் உன்
வரவைப் பார்த்திருப்போம்!

இவரின் பிரிவால் துயருறும்:
கணவர், மகன், அம்மா, மாமா,
மாமி, அண்ணா, அக்காமார்,
அத்தான், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
(15271)

# எட்டாவது ஆண்டு நினைவலைகள்



மண்ணக வாழ்வில் 12 - 04 - 1934

விண்ணக வாழ்வில் 10 - 03 - 1995

## செல்வி பரமேஸ்வரி கந்தையா

*(இளைப்பாறிய ஆசிரியை - இளவாலை)*

அன்பினைக் கற்றுத் தந்து
அன்போடு வாழ்ந்து காட்டி
ஆண்டவன் அடி சேர்ந்த
அன்புச் சகோதரியே!
ஆண்டுகள் எட்டு என்ன
எண்ணூறு சென்றாலும்
ஆறாது எம் துயர்
ஆற்றுவார் யார் உளர்?

*374, கச்சேரி - நல்லூர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (15400)

மாறாத அன்புடன்:
தம்பி, தங்கைகள்,
குடும்பத்தினர்.

உதயன்

# தமிழருக்கு எதிராக வன்முறைக்கு திட்டமா?

அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும், மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வை ஆட்சேபித்தும் தலைநகர் கொழும்பை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் பேரணி ஒன்றை இன்று நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் ஒரு கூட்டணியாகச் செயற்பட இணங்கிய பின்னர், அவை இரண்டும் ஒருமித்து ஏற்பாடு செய்துள்ள பெரும் போராட்டமாக இது கருதப்படுகின்றது.

கிராமங்களில் இருந்து சுமார் பத்து லட்சம் பேரைத் தலைநகருக்குத் திரட்டி வந்து இந்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இப்படி போராட்டம் என்ற பெயரில் கூட்டத்துக்கு ஆள்களை ஏற்றி - இறக்கி திரட்டுவதில் ஜே.வி.பியின் திறமை ஊரறிந்தது. எனவே, சிவப்புச் சட்டைக்காரரின் 'ஏற்றி - இறக்கல்' சேவை இன்று தலைநகரில் மும்முரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் தென்னிலங்கையில் நடத்தப்பட்ட கூச்சல் போராட்டம் சத்தமின்றி அடங்கிவிட்டது.

பொ.ஐ.முன்னணிக்குள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் பனிப்போர் நடத்தி வரும் அநுரா பண்டாரநாயக்கா, ராஜபக்ஷவின் கூச்சல் போராட்டத்தை விஞ்சும் அளவுக்கு - தனது திறமையைக் காட்டும் விதத்தில் - ஜே.வி.பியுடன் இணைந்து இன்றைய எதிர்ப்புப் பேரணிக்கு முழுமூச்சுடன் முஸ்தீபு செய்திருக்கின்றார்.

இதற்கிடையில் -

இந்தப் பேரணியைக் குழப்பி 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் போன்ற கலவரம் ஒன்றை உருவாக்க ஐ.தே.கட்சியில் ஒருபகுதியினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர் எனத் தனக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது என்று முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க. அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த ஏற்பாடுகளைச் செய்யும்படி பிரதமரையும் உள்துறை அமைச்சரையும் அவர் கேட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டு அக்கோரிக்கைக்கு அதிக பிரசாரமும் முக்கியத்துவமும் கூடக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பின் பின்னணி, பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

★ உண்மையிலேயே ஐ.தே.கட்சியின் ஒரு பிரிவினர் அத்தகைய வேலையைச் செய்துவிட்டு பொ.ஐ.மு. மீதும் ஜே.வி.பி.மீதும் குற்றத்தைச் சுமத்தி அவற்றுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்? அதனை முன்கூட்டியே அறிந்ததால்தான் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்தாரா?

★ தமிழருக்கு எதிராக பேரினவாதம் பேசும் ஜே.வி.பியுடன் ஜனாதிபதியின் கட்சி கூட்டுச் சேர்ந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. பேரணியின்போது தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அதன் மூலம் சமாதான முயற்சிகளைக் குழப்பும் திட்டம் பேரணி ஏற்பாட்டார்களுக்கு இருக்கலாம். அத்தகைய நடவடிக்கையினால் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிட்டு, பழி தங்கள் மீது விழாமல் இருக்க இப்படி முன்கூட்டியே பழியைத வேறு தரப்பு மீது சுமத்த முதலிலேயே ஆயத்தமாகிவிட்டார்களா?

★ ஜே.வி.பி. - பொ.ஐ.மு. கூட்டினால் பெரும் சனக்கூட்டம் திரளும். அதை வைத்து தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த ஜே.வி.பி.பேரினவாதிகள் திட்டமிட்டிருக்கக்கூடும். அது பற்றிய தகவல் முன்கூட்டியே ஜனாதிபதிக்கு கிடைத்துவிட்டதால், அத்தகைய நடவடிக்கையின் விளைவாக தமது பொ.ஐ.மு. மீது பழிவிழும் என்று அஞ்சி, ஜனாதிபதி முன்கூட்டியே தமது தரப்பை அந்தப் பழியிலிருந்து விடுவிக்க இவ்வாறு அறிவித்தாரா?

★ அல்லது இன்று நடக்கும் தமது பேரணி குறித்து பரபரப்பை ஏற்படுத்தி, ஆள்களைத் திரட்டுவதற்காக, இவ்வாறு அரசியல் 'ஸ்டண்ட' அறிவிப்பாக இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தாரா?

★ இல்லையேல் பெரும் எண்ணிக்கையில் திரளும் கூட்டத்தை தமிழருக்கு எதிராகத் தூண்டிவிடும் ஓர் அறிவிப்புத் தகவலாக இதனை அவர் வெளியிட்டாரா?

- இப்படி பல கேள்விகள், ஐயங்கள் எழுகின்றன.

எது எப்படியென்றாலும், தமிழருக்கு எதிராகப் பெரிய இனக்கலவரங்கள், 1977 இலும் பின்னர் 1983 இலும் கடைசியாக நடந்தன.

சிறிய ஆயுதக்குழுக்களின் அங்கொன்றும் இங்கொன்றுமான தாக்குதல்களாக இருந்த தமிழரின் விடுதலைப் போராட்டம், பெரும் மரபுவழி இராணுவ யுத்தமாக, விஸ்வரூபம் எடுக்க இந்த இனக்கலவரங்களே காரணம்.

அந்தப் பாடத்தைப் பேரினவாதம் மறந்துவிடக்கூடாது. மீண்டும் அதே வழியை நாடுவது நாடு சுலபமாக துண்டாடப்பட உதவும் விடயமாகவே அமையும் என்பதையும் அது புரிந்துகொள்ளவேண்டும்.

# குடாநாட்டு விவசாயிகளுக்கு வாரந்தோறும் விவசாயப்பயிற்சி

அச்சுவேலி,மார்ச்10

விவசாயத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு வாரந்தோறும் விவசாயப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

திருநெல்வேலி விவசாயப்பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகள் பயிற்சிபெறுவர்.

மார்ச் மாதத்திற்கான பயிற்சி வகுப்புக்கள் மார்ச் 12ஆம், 20 ஆம், 26ஆம் திகதிகளில் இடம்பெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள பயிற்சி வகுப்பில் "வெங்காயத்தில் நோய்ப் பீடை முகாமைத்துவம்" என்ற விடயம் தொடர்பாகவும் - 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் பயிற்சி வகுப்பில் "கூட்டெருத் தயாரிப்பும் பாவனையும்" என்ற தலைப்பிலும் -

26 ஆம் திகதி புதன்கிழமை "தேசிப்பழம் சேமிப்பு முறைகள்" என்ற விடயம் தொடர்பாகவும் பயிற்சி வழங்கப்படும்.

விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு மாதந்தோறும் வாரத்தில் குறித்தொதுக்கப்பட்ட தினங்களில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# திருவீதி மான்மியம்

குப்பைகள் கூளம் தன்னை
  கொண்டுபோய் கொட்டுவதற்கு
இப்பெரு யாழ் நகரம் தன்னில்
  இடமில்லை என்றுதானோ
ஒப்பெரும் யாழ். இந்து அண்டை
  ஓயாது கொட்டுகின்றீர்
தப்பாது கொடுநோய் பற்றி
  தாமாக இளைஞர் மாள
எப்படி மனது வந்து
  ஈனற் செயலினைச் செய்கின்றீர்கள்?
இப்படி இளைஞர் மாண்டால்
  இப்பழி யாரைச் சேரும்.

- விகடகவி.

## யுத்தத்தின்போது திட்டமிட்டு

# அழிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச வளங்கள் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும்!

## வலி.கிழக்கு கோட்டப் பொறுப்பாளர் யாழவன்

எமது மண்ணையும் மண்ணின் வளங்களையும் பேணிப் பாதுகாப்பதன் மூலம் வாழ்க்கையை வளம்படுத்தலாம். இந்த வகையில் திட்டமிட்டு அழிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச வளங்களை மீளக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்.

- இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி. கிழக்கு கோட்டப் பொறுப்பாளர் சி.யாழவன்.

வசாவிளான் கிழக்கு, குட்டியபுலம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இலவசமாக தென்னம்பிள்ளைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த கால யுத்தத்தின் மூலம், திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகள் மூலம் எமது பொருளாதார வளங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பிரதேச வளங்களை திட்டமிட்டு அழிப்பதன் மூலம் அவர்களை அடிபணிய வைக்கமுடியும் எனக் கனவுகண்ட எதிரியின் எண்ணம் விடுதலைப் புலிகளின் வெற்றிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேச வளங்கள் மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும். தென்னை போன்ற பயிர்கள் சந்ததி சந்ததியாக நின்று பயன்தருவன. அவற்றை நாம் பாதுகாக்கவேண்டும்.

எமது எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காக நாம் தியாகங்களைச் செய்ய முன்வரவேண்டும் - என்றார். (எ-11)

# ஒடியலின் நச்சுத்தன்மையை அகற்ற பனை அபிவிருத்திச்சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்10

சோயா, உழுந்து போன்ற தானிய வகைகளிலும், ஒடியல் மாவிலும் காணப்படும் ஒருவித நச்சுத்தன்மையை அகற்றி உண்ணுமாறு பனை அபிவிருத்திச்சபை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சோயா, உழுந்து போன்றவற்றை நீரில் ஊறவைத்து உணவுப் பண்டங்கள் தயாரிப்பது பாரம்பரிய வழக்கம். இச்செயற்பாடு இத்தானிய வகைகளில் உள்ள நச்சுத்தன்மையை அகற்றுவதற்கு பிரயோகமாகிறது என முன்னரே கண்டறியப்பட்டுள்ளது.

ஒடியல்மாவின் நச்சுத்தன்மை பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டபோதும் இதை அகற்றுவதற்கான ஆய்வுகள் 2000 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த ஆண்டில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, பேராதனை மருத்துவ பீடங்கள், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வுகள் தற்போது இதற்கான செய்முறையை வெளியிட்டுள்ளன.

இப்பரிசோதனை மூலம் ஒடியல் மாவை கழுவுதல், நீரூற்றிக் காய்ச்சுதல், அவித்தல் போன்ற முறைகளினால் இந்த நச்சுத்தன்மை முற்றாக அகல்வதில்லை. உயர்நிலையில் 45 நிமிடங்களுக்கு ஆகக் குறைந்தது 80 பாகை சென்ரிகிறேட் வெப்ப நிலையில் வறுப்பதன் மூலம் நச்சுத்தன்மையை முற்றாக அகற்ற முடியும். இச்செயல்முறை சாதாரண பாவனைக்கு இலகுவானதாக கண்டறியப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபை ஒடியல்மா பாவனைக்கு இச்செயற்பாட்டை கையாளுமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்துகிறது - என்றுள்ளது. (ஒ)

## மீளக்குடியமரும் மக்கள்

# தாண்டிக்குளம் சோதனை நிலையை 24 மணிநேரமும் பயன்படுத்த நிபந்தனை!

## ஆலோசனைக் கூட்டத்தில் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

வவுனியா தாண்டிக்குளத்தை அண்டிய கிராமங்களில் மீளக்குடியமரும் மக்கள் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தாண்டிக்குளம் சோதனை நிலையம் ஊடாக 24 மணிநேரமும் சென்றுவர படையினர் நிபந்தனை விதித்துள்ளனர்.

தாண்டிக்குளம், நெல்வேலி, சிதம்பரம், பணிக்கர்புளியங்குளம் ஆகிய இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்தல் தொடர்பாக ஆராய நேற்றுக் கூட்டப்பட்ட கூட்டத்தில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் செயலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் வன்னி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசில் சந்திரபால, விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிக்கப்பட்ட இடங்களில் மக்கள் மீளக்குடியமர வசதியாக கண்ணிகள் அகற்றப்பட்டுவிட்டன. எனவே மக்கள மீளக்குடியமரலாம் என்று சந்திரபால தெரிவித்தார்.

அந்த மக்கள் மீளக்குடியமர வசதியாக தாண்டிக்குளம் சோதனை நிலை ஊடாக அவர்கள் 24 மணிநேரமும் சென்றுவர அனுமதிக்க வேண்டும் என்று எழிலன் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்த இராணுவ அதிகாரி, அந்தப் பாதையைப் பயன்படுத்த விரும்பும் மீளக்குடியமர்பவர்கள் தினமும் காலை 7.30 மணிக்கு சோதனை நிலையத்தில பதிவுகளை மேற்கொண்டால் அவர்கள் அந்தப் பாதை ஊடாக 24 மணிநேரமும் சென்றுவர அனுமதிக்கப்படுவர் என்று நிபந்தனை விதித்தார். (ம-3-164)

### நாளை

மாசி 27
செவ்வாய்க்கிழமை
(11.03.2003)
திதி : அட்டமி
முன் இரவு 10.07 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
வைகறை 5.27 வரை.
சுபநேரம் : 10.53 - 12.23
ராகுகாலம்: 3.23 - 4.53
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உன்னைப்பற்றிய எதிர்பார்ப்பை பிறரிடம் அதிகரிக்காதே முன்னேற்றத்தை அது தாமதப்படுத்தும்.

# பெண்களுக்கே ஆயுள் அதிகம்!

இலங்கைச் சனத்தொகை மதிப்பீட்டுத் திணைக்கள ஆய்வின்படி இலங்கையில் பெண்களின் ஆயுட்காலமே அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டுக்கான சனத்தொகைப்புள்ளி விவரக்கொத்த றிக்கையின் பிரகாரம் ஆண்களின் ஆயுட்காலம் 70.7 ஆகவும் - பெண்களின் ஆயுட்காலம் 75.4 எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.(ஒ-12)

### பரமனது பாதம் போற்றி போற்றி!

வண்ணை நகர் தன்னை உயர்தலமாய்க் கொண்டு
  வளம்யாவும் பெருகிடவே அருள் சுரந்து
திண்மையொடு தவம் புரிவார்க்கிரங்கி மேலாம்
  தூய உருகான வந்து வரங்களீந்து
தண்ணிடுவார் பவப்பிணியை நாளும் நீக்கி
  நல்வாழ்வு கண்டிடவே கிருபை கூர்ந்து
பண்ணின் மொழித் தையலொடு இலங்குகின்ற
  பரமனது திருப்பாதம் போற்றி போற்றி!

-- சாங்கீதபூஷணம் - ஏ.கே.ஏரம்பமூர்த்தி
(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதினோராம் திருவிழா இன்று)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பெரிய விறகுகாலைக்குப் பொருத்தமான பெரிய விறகுத் தராசு, சங்கிலி, தட்டு, படிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகா, கூழாவடி (தபால் கந்தோருக்கு அருகாமையில்), 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (15360)

மோட்டறோலா தொலைபேசி சோலருடன் விற்பனைக்கு உண்டு. உங்கள் பெயருக்கு மாற்றித் தரப்படும். தொடர்பு: வசீகரன், மானிப்பாய் வீதி, தாவடி. T.P. No.: 222 2690 (15451)

## தேவை

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பியா தட்டச்சு இயந்திரம் தேவை. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பிராய். (15335)

## இலக்கிய கட்டுரைகள்

மாணவர்கள் நடிப்பதற்கு பொருத்தமான "பரிசு" நாடகத்தைக் கொண்டது சிறுகதை, நாவல், குறுநாவல், நாடக இலக்கிய விமர்சனம் எல்லாவற்றிற்கும் விளக்கம் எழுதியுள்ளார். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. (15377)

## காணவில்லை

மாவெள்ளை (பட்டர்கலர்) நிறமுடைய, நெற்றியில் வெள்ளைச் சுட்டி கொண்ட கன்றுஈனும் நிலையிலுள்ள பசுமாடு 04.03.2003 செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: யோ.மரியநாயகம் (பாலு), 42, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.(15455)

உடையார்கட்டு தெற்கு, முல்லைத்தீவு என்னும் முகவரியுடைய இரத்தின கோபால் திருலோகவதனி என்பவரது தேசிய அ.அட்டை (808605210V), விசேட அ.அட்டை (0902047874), பல்கலைக்கழக அ.அட்டை, வங்கிப் புத்தகம், நூலக அட்டை, தனியார் கல்விநிறுவன அ.அட்டை என்பன யாழ்.முனீஸ்வரன் வீதியில் 08.03.2003 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும். ஞானசெல்வரத்தினம், லக்சுமி கொமினிக்கேசன், அறுகால்மடம் T.P.:3111 (15468)

## VAN விற்பனைக்கு

மிக மிக நல்ல நிலையிலுள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் A55 மொடல் 33ஸ்ரீ தொடர் இலக்கமுடைய (கரும் பச்சை நிறம்) டிலிவரி வான் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகா, கூழாவடி (தபால் கந்தோருக்கு அருகாமையில்), 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (15359)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின அல்ஷேஷன் நாய்க்குட்டிகள் (பூச்சி நீக்கியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தயாநிதி, ஆடியபாதம் வீதி, பிடாரி அம்மன் கோவிலடி, கொக்குவில்.(15469)

## முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்10

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கென யாழ்.சைவபரிபாலன சபையினர் நடத்தும் முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 17ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளபம், முல்லைத்தவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள், நேர அட்டவணை என்பன சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## சமுர்த்தி வங்கி கட்டடம் நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி,மார்ச்10

அச்சுவேலி - புத்தூர் பகுதியில் சமுர்த்தி வங்கிக்கான நிரந்தரக் கட்டடத்தை நிறுவுவதற்கு 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வங்கிக் கட்டடத்தை நிறுவுவதற்கான காணியை அன்பளிப்புச் செய்ய சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் முன் வரவேண்டும் என யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (எ-11)

## வாழ்த்துகிறோம்

நேற்றுமுன்தினம் உலக மகளிர் தினத்தில்
நிதர்சனம் மகளிர் பிரிவினரால் வெளியிடப்பட்டிருக்கும்
போராளி செல்வி குயிலினியின் இயக்கத்தில் உருவான

உப்பில் உறைந்த உதிரங்கள்



திரைப்படம் வெற்றிபெறவும்,
அவர்களது பணி மேலும் தொடரவும்
எமது மனப்பூர்வமான வாழ்த்துகள்

- ஸ்கிரிப்நெற் திரைக்கதை உருவாக்கப் பயிலுநர்கள்,
திட்ட இணைப்பாளர்கள்,
திட்ட இயக்குநர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

## இராமலிங்கம் சிவானந்தன்

*(கிராம அலுவலர் சண்டிக்குளி, J/76)*



தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் மக்களின் நலனுக்காக நேர்மையுடன் எமது கிராமத்தில் 8 வருடங்களுக்குமேலாக அயராது உழைத்து வருவதுடன் மக்களின் நன்மை, தீமைகளில் கலந்து மக்களுடன் ஒன்றித்துள்ள

**இராமலிங்கம் சிவானந்தன் அவர்கள்**

கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மிக மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நலமுடன் வாழவும் எமது கிராம மக்களுக்கு அவரது சேவை தொடரவும் எல்லாம்வல்ல எம்பெருமாள் அருள் புரிவாராக.

கச்சேரியடி மக்கள்,
காட்டுக் கந்தோர் வாழ் மக்கள்.

(15380)

## மனமார வாழ்த்துகின்றோம்



J/218, கணேஸ்வரம்
*அளவெட்டி கிராம உத்தியோகத்தர்*
**திரு. செல்லையா சிவயோகநாதன்**
அவர்கள் சமாதான நீதிவானாகவும், கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டும் பாராட்டி எல்லாம் வல்ல அணிஞ்சிலடி விநாயகர் ஆசியுடன் மேலும் பல உயர்ச்சிகள் பெற்று, சிறப்புடன் வாழவேண்டும் என மனமார வாழ்த்துகின்றோம்.

அணிஞ்சிலடி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரும்,
அறநெறிப் பாடசாலை மாணவர்களும்,
நண்பன் சி.வீரசிங்கமும்.

*கணேஸ்வரம்,*
*அளவெட்டி.* (15465)

*சிவமயம்*

## கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

பொங்கல் தினத்தில்
வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

## அறிவித்தல்

எதிர்வரும் 18.03.2003 செவ்வாய் நடைபெறவுள்ள பொங்கல் தினத்தில் வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில, ஏல விற்பனை எதிர்வரும் 11.03.2003 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆலய காரியாலயத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
பரிபாலனசபையினர்.

(சி-26862)

## உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு

விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் அன்னை நாகா (F)புட்சிற்றி பல்பொருள் சிறப்பு அங்காடிக்கு பின்வரும் பொருள் களை உடனடியாக விநியோகிக்கக் கூடியவர்கள் 13.03.03 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

1) பனம் பொருள்கள் (உற்பத்திகள் - கைப்பணிப் பொருள்கள்)
2) கடல் உணவு வகைகள்
3) மரக்கறி ,பழவகைகள்
4) பழரசம், பழப்பாகு
5) மரத்தினாலான கைவினைப் பொருள்கள்
6) இறைச்சி வகைகள்
7) சிற்றுண்டி வகைகள், இனிப்பு வகைகள்
8) வெதுப்பக உற்பத்திப் பொருள்கள்


*நேரில் தொடர்பு கொள்ளவும்.*

**கொள்வனவு முகாமையாளர்**

**அன்னை நாகா புட்சிற்றி,**
*175, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15394)

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம*

## ஓராண்டு நினைவுத் திதி



பூவுலகில் மலர்ந்தது 14 - 03 - 1933
விண்ணுலகில் மிளிர்ந்தது 19 - 02 - 2002

*விஸ்வப் பிரம்மஸ்ரீ* **வே.கந்தசாமி ஆச்சாரி**

மாறாத அன்புடன் எமை அரவணைத்து
மகிழ்வுடன் வாழ வழி அமைத்து
ஆறாத துயர் தனில் எமை ஆழ்த்தி
இறைவன் திருவடிதனை அடைந்த
உங்கள் நினைவுகள் என்றும்
மாறாது மறையாது நிலைத்திருக்கும்.
"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும"
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

158/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (15463)

*பாசத்துடன்*
மனைவி, பிள்ளைகள்.

## இலவச SPOKEN ENGLISH பாடநெறி

ஆங்கில பேச்சுப் பயிற்சி தபால் மூலம்

சரளமாக ஆங்கிலம் எழுத, வாசிக்க 90 நாள்களில் பயிற்சி அளிக்கும் பாடநெறியை தமிழ் விளக்கத்தில் படியுங்கள்.

வீட்டில் அல்லது தொழில்புரியும் இடத்தில் இருந்துகொண்டு ஆங்கிலத்தை இலகுவான முறையில் குறுகிய காலத்தில் விரிவாகக் கற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு. (15385)

பாடநெறி முடிவில்: **Diploma** சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 4/50 பெறுமதியான 3 முத்திரைகளை அனுப்பவும்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE** P.O.BOX 083, Kandy Tel: 0777-802849

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நாகப்பர் சின்னத்தம்பி

உதிர்வு - 2003.03.06

எமது செயலக பணியாளர் **சி.குலதாஸன்** அவர்களின் தந்தையாரான **நாகப்பர் சின்னத்தம்பி** அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரும் அடையும் அதேவேளை, அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம்,*
*கிளிநொச்சி.* (சி-26867)

அரச அதிபரும், பணியாளர்களும்
செயலக நலன்புரிச் சங்கத்தினரும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மலர்வு 12 - 07 - 1905
உதிர்வு 08 - 02 - 2003

அமரர்

## திருமதி வேலுப்பிள்ளை வள்ளியம்மை

*அன்னையே நின் அரிய தொண்டால்*
*எம்மையே ஏற்றி வைத்தாய்*
*உன்னையே உன்னி எங்கள்*
*உறுபணி செய்வோம் தாயே!*

08.02.2003 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி வேலுப்பிள்ளை வள்ளியம்மை அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.03.2003) திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*"பார்வதி வாசம்"*
*அல்லாரை.* (15458)

# பதாகைகள் கட்டினால் போதுமா? பாடசாலையை கவனிக்கவேண்டாமா?

யாழ்ப்பாணம் கல்வி வலய அதிகாரிகளின் பாராமுகத்தினால், இடம்பெயர்வுக்குள்ளான அரியாலை கிழக்கைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகள் பல்வேறு பற்றாக்குறைகளுடன் இயங்குகின்ற அவலநிலைமைக்கு உள்ளாகியுள்ளன.

அரியாலை கிழக்கு அரசாங்க தமிழ்கலவன் பாடசாலை, அரியாலை பூம்புகார் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

குறிப்பாக வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் மற்றும் ஏனைய பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத பிள்ளைகளுமே தற்போது இப்பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள்.

தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள இந்த இரு பாடசாலைகளிலும் மொத்தமாக இரண்டு அதிபர்கள் உட்பட 9 ஆசிரியர்களே கற்பித்தல் பணியில் ஈடுபடுகின்றனர்.

தற்போது அரியாலை தபால் கட்டை சந்திக்கு அண்மையில் கண்டி வீதியில் உள்ள தனியார் வீட்டில் இந்த இரு பாடசாலைகளும் ஒன்றாக வாடகை செலுத்தி இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அரியாலைப் பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு வருடம் கடந்த நிலைமையிலும்கூட இப்பாடசாலை கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேயே இயங்கி வந்தது.

மக்கள் மீளக்குடியமர்ந்த அரியாலைப் பகுதிக்கு பாடசாலையை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக கல்வித் திணைக்களம் மற்றும் இவ்விரு பாடசாலைகளின் நிர்வாகம் என்பன இணைந்து கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை வளவினுள்ளேயே 'யுனிசெவ்' நிதித் திட்டத்தின் கீழ் நான்கு லட்சம் ரூபா செலவில் தற்காலிகமாக வகுப்பறைகளை அமைத்துள்ளனர்.

அரியாலைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கந்தர்மடம் பகுதியில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தனர். குறைந்த எண்ணிக்கையிலான பிள்ளைகளே காணப்பட்டனர். இந்நிலைமையில் இக்கட்டடத்தை நிறுவுவதற்கான தேவை ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லையென பெற்றோர்கள் கூறுகின்றனர்.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து இந்தப் பாடசாலைகள் இடம்பெயர்ந்து அரியாலை பார்வதி வித்தியாசாலையில் இயங்கி மீண்டும் 2000ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தற்காலிகமாக இயங்கிவந்தன.

தற்போது இப்பாடசாலைகளில் மாணவர்களுக்கான ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. நகரப் பாடசாலைகளில் தரம் ஒன்று, தரம் ஆறு ஆகிய வகுப்புகளில் பாடங்கள் ஆங்கில மொழியில் நடத்தப்படும்போது இவ்விரு பாடசாலைகளுக்கும் பொதுவாக ஓர் ஆங்கில ஆசிரியர்கூட இன்றுவரை நியமனம் செய்யப்படவில்லை. ஆகக்குறைந்தது பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒருவரையேனும் நியமிக்க யாழ். கல்வி வலயம் இன்றுவரை எந்த வகையான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆனால், பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் இணைந்து தற்காலிகமாக ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமித்து அவருக்கான கொடுப்பனவையும் தமது சொந்தப் பணத்தின்மூலம் செலுத்தி வருகின்றார்கள். ஆசிரியர்களின் இப்பணி பாராட்டப்படவேண்டியதாகும்.

இதேபோன்று தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கும் இந்த இரு பாடசாலைகளுமே கட்டட உரிமையாளருக்கான வாடகையையும் செலுத்தி வருகின்றன. கல்வித் திணைக்களம் இதற்கான கொடுப்பனவைச் செலுத்த நடவடிக்கையெடுக்கவில்லை எனவும் தெரிய வருகின்றது.

சுமார் நூறுபிள்ளைகள் வரையே இவ்விரு பாடசாலைகளிலும் கற்று வருகின்றார்கள். இதற்காக பாடசாலையில் கல்வி கற்கும் சிறுவர்களின் கல்விகற்கும் அடிப்படை உரிமையை மறுக்க முடியாது.

இது விடயத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது கவனத்தில் கொண்டு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கல்வி வலயங்கள், கோட்டங்களின் முன்பாக மட்டும் பதாகைகள் வைத்து விட்டு நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஆசிரியர்களையும் வழங்காது விடுவது நரி கொக்குக்கு விருந்து வைத்த கதையாகத்தான் முடியும்.



## மக்கள் மன்றம்

யுனிசெவ் நிறுவனமும் கல்வி அமைச்சும் இணைந்து ஒவ்வொரு பிள்ளையும் அடிப்படை கல்விகற்க உரிமையுடையவர்கள, அவர்களைக் கட்டாயம் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டும் என்று பதாகைகள், அறிக்கைகள் வெளியிடுவதன் மூலம் யாரும் பயன்பெறப் போவதில்லை.

இவ்வாண்டு தொடக்கத்தில் கல்விக் கோட்டங்கள், வலயங்களின் முன்னர் யுனிசெப் நிறுவனமும் கல்வித் திணைக்களமும் இணைந்து வைத்திருந்த பதாகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"உங்கள் பிள்ளைகளை தினந்தோறும் பாடசாலைகளுக்கு அனுப்புங்கள்".

"கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை".

இரண்டு விடயங்களும் சிறுவர்கள் மீது அக்கறை கொண்ட பெற்றோர்கள் முதல் நலன்விரும்பிகள், ஆர்வலர்கள் வரை ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறப்பான விடயமாகும்.

மேலைத்தேசங்களைச் சார்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது நாட்டு நடைமுறையை இங்கும் செயல்படுத்துவதில் முனைப்பாக நிற்கின்றார்கள். அண்மைக் காலங்களில் சிறுவர் உரிமைகள் என்றெல்லாம் கூறியும் வருகின்றார்கள்.

இத்தகைய அமைப்பினர் இடம்பெயர்ந்த மக்களின் அதிலும் வறுமையிலும் வறுமையான கல்வியில் பின்தங்கிய பெற்றோர்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை பல்வேறு வசதியீனங்களுடன் இயங்குவது பற்றி அறியாமல் இருக்கிறார்களா? அல்லது அறிந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்களா?

எதிர்காலத்திலேனும் இப்பாடசாலைகளின் பிள்ளைகள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறை, விளையாட்டு உபகரணம் இன்மை கல்வி கற்பதற்கான உபகரணங்கள் இன்மை போன்றவற்றை நீக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். கல்வி வலயம் மற்றும் கோட்ட அலுவலகங்களும் இத்தகைய நெருக்கடியான, வசதியீனமான முறையில் இயங்கும் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டும். இந்த வகையில் ஆங்கில பாடத்திற்கு பகுதி நேரமாக நியமனம் செய்யும் இளம் ஆசிரியர்களை இத்தகைய பாடசாலைகளுக்கு அனுப்பி, மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க வேண்டும்.

**வில்லவன்**

வீடு வாசல்களை இழந்து, சொத்துக்களை இழந்து தொழில்களை இழந்து இருக்க இடமின்றி நிர்க்கதியாக உள்ளவர்களின் பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படக் கூடிய முறையில் நடந்து கொள்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மனிதாபிமான மற்ற ஒரு செயல் என்றே கூறவேண்டும்.

தமிழன் இன்றும் அழிவுகளைச் சந்தித்தும் சொத்து, சுதந்திரங்களைச் இழந்தும் உலகின் முன் நிமிர்ந்து நிற்கின்றான் என்றால் அவனது கல்விச் செல்வமே காரணமாகும். அந்த வகையில் இடம்பெயர்வின்மூலம் சகலதையும் இழந்து நிற்கும் இத்தகைய பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் இடம் பெயர்வைக் காரணமாகக் கொண்டு சுமார் 25 வரையிலான பாடசாலைகள் இயங்காது மூடப்பட்டுள்ளன. இதேபோன்று குறைந்த எண்ணிக்கையான பிள்ளைகள் உள்ளதைக் காரணம் காட்டி இப்பாடசாலைகளையும் ஏதாவது ஒரு பாடசாலையுடன் இணைத்துவிடலாம். என சிலர் சிந்திக்கக் கூடும். இத்தகைய நடவடிக்கை சப்பாத்துக்கு அளவாக காலை வெட்டுவது போன்றே அமையமுடியும்.

இப் பாடசாலைகளில் ஒன்றான பூம்புகார் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு மக்களிடம் 1991ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட பாடசாலையாகும்.

பூம்புகார் பகுதியில் உள்ள பிள்ளைகள் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திற்கோ அன்றி வேறு பாடசாலைகளுக்கோ செல்லுகின்ற அவல நிலையையும் போக்குவரத்து வசதியின்மையையும் இதனால் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கும் நிலைமையும் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்ட பாடசாலை இது என்பது குறிப்பிடவேண்டியதாகும்.

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பாடசாலை அப்பகுதி பெற்றோர்களின் பெரு முயற்சி காரணமாக கல்வித் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்டது. அப்போது ஆண்டு ஐந்து முதல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆண்டு ஒன்பது வரையான வகுப்புகளைக் கொண்டு இருந்தது.

சுமார் நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளைக் கொண்ட பாடசாலையாகவும், பல்வேறு போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டிவந்த ஒரு பாடசாலையாகவும் விளங்கியது.

ஆகவே, இப்பாடசாலைகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை குறிப்பாக ஆசிரியர்கள் பற்றாக்குறை இல்லாமல் இப்பாடசாலைகளை உயர்த்திவிட சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கையாகும். ★

# சிறியோருக்கு உதவுங்கள்

## தவக்காலச் சிந்தனை - ஆறாம் நாள் -

*"மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்குச் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்"*

(மத்:25:45)

தவக்காலத்தில் 6 ஆம் நாளில் காலடி எடுத்துவைக்கும் இன்று எமக்குக் கொடுக்கப்படும் இறைவார்த்தை எமது வாழ்விற்கு ஒரு சவாலாக அமைகிறது. மிகச் சிறியோர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்? அவர்கள் வேறு யாருமல்ல. எம்முடன் வாழும் வறியவர்கள். வறியவர்கள் என்றால் உணவு, உடை அற்றவர்கள் என்றுதான் எம்மில் பலர் எண்ணுகிறார்கள். அது தவறானது. எமது நாட்டைப் பொறுத்தவரை உடல், உளப் பாதிப்புக்குள்ளாகிய வறியவர்களே அதிகமானவர்கள் உள்ளனர். கடந்த பல வருடங்களாக நடைபெற்று தற்போது ஓய்ந்திருக்கும் போரால் பலர் இந்நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சிறுவர்களுக்கு நாம் என்ன வழிகளில் ஆறுதலாக உள்ளோம் என சிறிது நேரம் சிந்தித்துப்பாருங்கள். நாங்கள் இறைவனைச் சந்திக்க அவருடன் பேச ஆசைப்படுகிறோம். அதற்காக பல பக்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். ஆயினும், அவரைக் காண இயலாததால் சோர்வடைகின்றோம். இவ்வாறு சோர்வடைபவர்களைப் பார்த்தே இறைவன் "நீங்கள் என்னை எங்கு தேடுகிறீர்கள்? நான் உங்கள் அருகில் மிகச்சிறியோர் வடிவில் உள்ளேன் அவர்களுக்கு செய்வதெல்லாம் எனக்கே செய்கின்றீர்கள்" என்று கூறுகிறார்.

**சி.சி.கொலிந்திரன்**

எனவே நாங்கள் எல்லோரும் எம்மைப் பற்றி, எமது வாழ்வைப் பற்றி ஒருமுறை முழுமையாக ஆராய்வோம். எனக்காக வாழ்கிறேனா? பிறருக்காக வாழ்கிறேனா? சுயநலத்துடன் வாழ்கிறேனா? பொது நலத்துடன் வாழ்கிறேனா சிந்திப்போம் இத்தவக்காலத்தில் புதுவாழ்வை ஆரம்பிக்க முயற்சிப்போம். ★

# கல்விச்சாலைக் காட்சிகள்



அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு கேடயம் வழங்குவதையும் அதிபர் கி.சிறீஸ்கந்தராசா உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (எ)



கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 வறிய மாணவர்களுக்கு தியாகி அறக்கொடை நிறுவனம் நிதியுதவி வழங்கி வருகின்றது. நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் எஸ். கமலநாதன் பெற்றோர் ஒருவரிடம் கொடுப்பனவை கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)



தென்புலோலி, புற்றளை மகாவித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மாடிக்கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (எ-173)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவமும் மதியபோசனவிருந்தும் அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கே.கே.அருள்வேல் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் சிறப்பு விருந்தினரான வலிகாமம் கல்வி வலய நிதி உதவியாளர் எஸ்.தவராசா, கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(எ-135)

# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.வ.தவகுலசிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி அம்மணி வயிரவன்

காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (15472) **ஆசிரியர் கழகம்.**



**உயர்திரு க.தேவராஜா**

*(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)*

அவர்களது
52ஆவது அகவையையொட்டி
தேவா பொன்விழாச் சபையால்
நடத்தப்படும்

## பரிசளிப்பு விழாவும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

காலம் : 10.03.2003 திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணி
இடம் : இணுவில் பொது நூலகம்
தலைவர் : திரு.அ.பஞ்சலிங்கம்
*(முன்னாள் அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி)*
குறிப்பு : பல்கலைக்கழக அனுமதி பெற்ற 57 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குதலும் இடம்பெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தேவா பொன்விழாச்சபை,
இணுவில்.
இணுவில் பொது நூலகம்,
இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள்,
K.R.S. நிறுவன அதிபர், ஊழியர்கள்,
A.T.C. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
K.T.C. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(C/26870)

# வீதி விபத்துகளின் எண்ணிக்கையில் இலங்கைக்கு மூன்றாவது இடம்!

## ஆசிய நிறுவனம் நடத்திய ஆய்வில் தகவல்

ஆசிய நாடுகளில் வீதி விபத்துக்கள் காரணமாக அதிக உயிரிழப்பு மற்றும் காயங்கள் ஏற்படுவோரின் எண்ணிக்கையில் இலங்கை மூன்றாம் இடம்பெற்றுள்ளது. விபத்துக்களால் ஏற்படும் இழப்புகளை தவிர்ப்பதற்கான தனியார் நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்விலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அந்த நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி 2001ஆம் ஆண்டில் இலங்கையில் 52ஆயிரத்து 57 வீதி விபத்துகளும் அவற்றால் 2ஆயிரத்து 159 உயிரிழப்புகளும் 2002ஆம் ஆண்டில் 55 ஆயிரத்து 31 வீதி விபத்துகளும் அவற்றில் 2ஆயிரத்து 160 உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்பட்டது.

இலங்கையில் வீதி விபத்துகளைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளவுள்ள நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பினைப் பெறும் நோக்கில் அந்த நிறுவனம் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் உதவிகள் வழங்குபவர்கள், பொது அமைப்பினர், அரச நிறுவனத்தினர் மற்றும் பொலீஸ் பிரிவினர் ஆகியோரின் பிரதிநிதிகள் பங்கேற்ற மாநாடொன்றினை சமீபத்தில் கொழும்பில் நடத்தியது. இந்த மாநாட்டிற்கு நிறுவனத்தின் தலைவர் கிறிக் கிறவ்ற் தலைமை வகித்தார்.

இலங்கையில் பெரும் எண்ணிக்கையான வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்கு இந்த மாநாடு பெரிதும் உதவியதாக மாநாட்டின் இறுதியில் அவர் தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறாமலும் அறவே அனுபவம் இல்லாமலும் பெரும் எண்ணிக்கையானோர் வாகனங்கள் செலுத்துவதாலேயே பெருமளவில் வீதி விபத்துக்கள் இலங்கையில் ஏற்படுகின்றன.

எனவே, இதற்கு உடனடி நிவாரணமாக ஆங்காங்கே சாரதி பயிற்சி நிலையங்களை அமைத்து, முறையான பயிற்சி வழங்கவேண்டியது அவசியம் எனவும்-அதேவேளை வீதி விபத்துகள் சம்பந்தமாக விழிப்புணர்வினை ஏற்படுத்தவேண்டும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார்.(ஒ-ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி திலீபன் விநோதினி

*(கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி, 'சுடர்ஒளி', 'உதயன்' விளம்பரப் பொறுப்பாளர்)*

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தி.விநோதினி 06.03.2003 வியாழக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சி.திலீபன் அவர்களின் அன்பு மனைவியும் திரு.திருமதி விசாகரத்தினம் விக்னேஸ்வரி ஆகியோரின் இளைய புத்திரியும் வியாஸ் (பிரான்ஸ்), முகுந்தினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசதாசின் அன்பு மைத்துனியும் மிதுஷாவின் அன்புச் சித்தியும் சிவபாதசுந்தரம் - ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் சி.துஷ்யந்தனின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2003) திங்கட்கிழமை பி.பகல் 2மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4 மணியளவில் பொரளை இந்து கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26B, Mallika Lane,*
*Wellawatta.*
*T.P.: 598073* (C26871)

தகவல்:
தகப்பன் - விசாகரத்தினம்,
கணவர் - திலீபன்.

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**தினம் ஒரு பரிசு - 29**

நாளை (11.03.2003) நடைபெறவுள்ள அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து இடையிலான ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணி எது?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (11.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 29, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**'அருணஸ்' தரும் பரிசு - 01**

அரை இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகும் நான்கு அணிகளும் எவை?

1) .............................. 3) ..............................
2) .............................. 4) ..............................

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி இன்று திங்கட்கிழமை (10.03.2003) நண்பகல் 1மணிக்குள் 'அருணஸ்' தரும் பரிசு - 1, உதயன் பணிமனை, 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.



முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்

Super Six பரிசு
ஜுமானா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி



தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1350ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 1? இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.



## நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## நயினாதீவு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின்

# யாழ்ப்பாண தொடர்பக
# திறப்பு விழா

இடம் : 72, மேற்கு மார்க்கெட், யாழ்ப்பாணம்
காலம் : இன்று (10.03.2003) திங்கட்கிழமை
பி.ப. 12.24 - 01.54 வரையுள்ள சுப வேளை

தலைவர் : திரு. கா.ஆ.தியாகராசா அவர்கள்
தலைவர், அறங்காவலர் சபை,

பிரதம விருந்தினர் : திரு. சிவ.மகாலிங்கம் அவர்கள்
உதவிப் பணிப்பாளர், இந்து சமய விவகார அமைச்சு, யாழ். பிராந்தியம்.

சிறப்பு விருந்தினர் : சிவஸ்ரீ சம்பு.மகேஸ்வரக் குருக்கள்
பீடாதிபதி, சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
ஆதின குரு, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

கௌரவ விருந்தினர்கள்:
01. திரு. ப.சிவபாஸ்கரன், சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்.
02. திரு. ஆ.குணரெத்தினம், குகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
03. திரு. த.குகனேசன், அம்பிகை களஞ்சியம், யாழ்ப்பாணம்.
04. திரு. கு.காங்கைவேணியன், வேணி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
05. திரு. த.குமாரசாமி, குமாரசாமி பிடைவை மாளிகை, யாழ்.
06. திரு. ச.கைலாசபிள்ளை, நியூ கமல் செரமிக், யாழ்ப்பாணம்.
07. திரு. கா.நித்தியானந்தன், சித்திவிநாயகர் களஞ்சியம், யாழ்.
08. திரு. சி.சிவகுமார், தர்சினி அமுதம், யாழ்ப்பாணம்.
09. திரு. ப.துரைராசசிங்கம், சுமங்கலி ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்.
10. திரு. சி.சிவமூர்த்தி, அர்ச்சனா ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்.
11. திரு. க.சோமசேகரம், மகாராணி பிடைவை மாளிகை, யாழ்.
12. உரிமையாளர், இ.ச.பேரம்பலம் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்.
13. உரிமையாளர், லிங்கம் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்.
14. உரிமையாளர், குலம் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்.
15. திரு. க.பாஸ்கரன் ஆச்சாரியார், பாஸ்கரன் சிற்பாலயம், யாழ்.

வரவேற்பாளர்கள் :
1. திரு. சி.தனபாலசிங்கம் - அறங்காவலர்
2. திரு. இ.யோகநாதன் - அறங்காவலர்
3. திரு. ச.தர்மராசா - அறங்காவலர்
4. திரு. வை.சுப்பிரமணியம் - அறங்காவலர்
5. திரு. க.நாகேஸ்வரன் - அறங்காவலர்
6 திருமதி த.சபாநாதன் - அறங்காவலர்

☆ குறிப்பு :-

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு உபகரிக்க விரும்பும் பூசைத் திரவியங்கள், அன்ன தானத்துக்குரிய பொருள்கள் ஆகியவற்றை ஒப்படைக்கவும். பூசை விவரங்கள் ஆகியவற்றை இத்தொடர்பகம் மூலம் அம்பிகையின் அடியார்கள் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

### நிகழ்ச்சி நிரல்

1. ஞானவைரவர் ஆலயத்திலிருந்து அம்பாளின் திருவுருவப் படம் தாங்கிச் செல்லல்.
2. தேவார பாராயணம் : திரு. நா. விசுவலிங்கம் (ஜே.பி.) அறங்காவலர்
3. மங்கள விளக்கேற்றல் : 1. பிரதம விருந்தினர் அவர்கள் 2. சிறப்பு விருந்தினர் அவர்கள்
4. தலைமையுரை : திரு.கா.ஆ.தியாகராசா தலைவர் அறங்காவலர் சபை
5. ஆசியுரை - சிறப்பு விருந்தினர்
6. சிறப்புரை - பிரதம விருந்தினர்
7. முதல்நாள் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தல் : கௌரவ விருந்தினர்கள்
8. முதல்நாள் தொடர்பக நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்பவர்: திரு. கனக.ஜீவசீலன் பொருளாளர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்
9. நன்றியுரை : திரு.கு.சரவணபவானந்தன் (ஜே.பி.) செயலாளர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்
10. இறைவணக்கம் : திரு. கனக. உருத்திரகுமாரன் B.A. அவர்கள் அறங்காவலர்.

அறங்காவலர் சபை
நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(15456)

## சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

வடமராட்சி,மார்ச்10

அல்வாய் வடக்கு நக்கீரன் சன சமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நிலையத் தலைவர் வ.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஆ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், கு.கஜேந்திரகுமார், விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி வருணா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

புதிய கட்டடத்தை நிலையத்தின் முன்னாள் தலைவர் கு.இராசரத்தினம் திறந்துவைப்பார். (எ-173)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் கிடைத்தது

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு உலக சுகாதார நிறுவனத்தினால் புதிய ரக அம்புலன்ஸ் வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை,மார்ச்10

உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக எதிர் வரும் ஜூலை 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரையிலான ஒருவாரம் உள்ளூராட்சி வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளை மக்களுக்கு உணர்த்துவதுடன், அவர்களின் பங்களிப்பினையும் தேவைகளையும் உணர்த்தும் நோக்குடன் இந்த வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

உள்ளூராட்சி வார நிகழ்வுகளை பிரதேச மட்டம் மற்றும் மாகாண ரீதியாக வெகு விமரிசையாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
## அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்-2003

காலம் : 2003.03.23 ஞாயிறு மு.ப.10 மணி
இடம் : பாடசாலை மண்டபம்
தலைவர் : திரு. வே. ஞானகாந்தன்(அதிபர்)

### நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்
02. தலைமையுரை
03. செயலாளர், சென்ற கூட்டறிக்கை, செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்.
04. பொருளாளர் கணக்கறிக்கை
05. புதிய நிர்வாகத்தினர் தெரிவு
06. பிரேரணைகள்
07. இறைவணக்கம்

பெற்றோர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு :
பிரேரணைகள் யாவும் 2003.03.20 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கலாம்.

வெ.வெற்றிவேல்
செயலாளர்

(சி-26865)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 - 06 - 1944



இறப்பு 09 - 02 - 2003

### அமரர் பூரணலிங்கம் விக்கினேஸ்வரன்
(நயினாதீவு)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாயி சமித்தி,
85/7, ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை. (15281)

தாய், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.


# அழகிய கூந்தலின் ரகசியம்




பக்கவிளைவு அற்றது

# பயோட்டினெக்ஸ்-E

பயோட்டினுடன் விட்டமின் - Eயும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

## எது உங்கள் பிரச்சினை ?

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா



இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

BIOTINEX - E

பாவனை முறை: தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்

இயற்கையான பயோட்டினெக்ஸ்-E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

யாழ் முகவர்
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☏ 021 2223191

வன்னி முகவர்
அகிலன் பார்மசி, (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By : Arkem Colombo
Tel : 470290, 075-344436 Email : arkem@sltnet.lk

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு எண் | 455 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 07.03.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5783064-5797452 |

வெற்றி இலக்கங்கள் **25 28 36 44**

லக்கினம் கடகம்



ஜக்பொட் பரிசு ரூபா.2,461,700/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,153,150/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 309,716 | 10 | 3,097,160 |
| 2 இலக்கங்கள் | 28,368 | 20 | 567,360 |
| 1 இல + லக்கினம் | 28,138 | 30 | 844,140 |
| 2 இல + லக்கினம் | 2,606 | 100 | 260,600 |
| 3 இலக்கங்கள் | 766 | 500 | 383,000 |
| 3 இல + லக்கினம் | 65 | 5,000 | 325,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,461,700 | - |
| மொத்தம் | 369,663 | - | 5,877,260 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,877,260/-

தொடர் இல. 4806694க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5795205-0-45**
**5787669-4-13**
**5790365-8-58**
**5783153-3-24**
**5793404-3-61**

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 27, செயின்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, [illegible] வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# அரசியல் பேசவிரும்பவில்லை; சமூகசேவையிலேயே என்நாட்டம்!

## ஜனாதிபதியின் சகோதரி சுனேத்ரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

அரசியல் பேசுவதை விரும்பவில்லை. சமூக சேவையிலேயே என் நாட்டம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்கா.

'சுனேத்ரா பவுன்டேஷன்' என்ற பெயரில் இவர் தொண்டு அமைப்பொன்றை நடத்தி வருகிறார். இந்த அமைப்பு வலுவிழந்தோருக்கான பயிற்சிப்பட்டறைகளை நடத்தி வருகிறது. இந்த அமைப்பு நடத்தும் வலுவிழந்தோருக்கான 5 நாள் பயிற்சிப் பட்டறை நேற்று யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் ஆரம்பமாகியது. இப்பயிற்சிப்பட்டறையை சுனேத்ரா பண்டாரநாயக்க ஆரம்பித்துவைத்தார். அப்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் பேசுவதில் எனக்கு ஆர்வம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் சமூகத்துக்கு சேவை ஆற்ற வேண்டும். அதிலும் அங்கவீனர்களுக்கு ஆற்றும் சேவையே மகத்தானது.

அங்கவீனர்களுக்குள்ளும் பல்வேறு திறமைகள் உண்டு அவற்றை வெளிக்கொண்டு வருவதையே எமது பயிற்சிப்பட்டறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாம் அரசிடமோ, அரசசார்பற்ற நிறுவனங்களிடமோ அதிகளவு நிதியை எதிர்பார்ப்பதில்லை. சில பயிற்சிப் பட்டறைகளுக்கு அரசின் உதவி இருந்தாலும் எனது சொந்த நிதியிலேயே இதனை மேற்கொண்டு வருகிறேன்.

சிறுவயது முதல் என்னை பாதித்த ஒரு விடயம் என்பதாலேயே ஊனமுற்றோருக்கு உதவுவதைப் பெரிதும் விரும்புகிறேன்.

கிளிநொச்சி உட்பட எமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் ஊனமுற்றோரை மகிழ்ச்சிப் படுத்தக்கூடிய பல நிகழ்ச்சிகளை நடத்தியும் பயிற்சித் திட்டங்களை வழங்கியும் வருகின்றோம்.

எமது நாட்டைச்சேர்ந்த றோகண தேவ, பிரிட்டனைச் சேர்ந்த வோள்ஸ் மற்றும் ஸ்ரங்கர் ஆகிய மூவரினதும் ஒத்துழைப்புடனேயே எனது இந்தப்பயிற்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றேன்.

அரசியல் ஊடாகவே சமாதானம் மலர முடியும். நான் அரசியல் பேச விரும்பவில்லை. ஆயினும், அரசியல் ஊடாக மலரும் சமாதானத்தை வரவேற்பதில் ஆர்வமாக உள்ளேன் - என்றார் சுனேத்ரா பண்டாரநாயக்க.

பயிற்சிப்பட்டறையில் மேலதிக பணிப்பாளர் றோகணதேவ கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

சமாதானம் மலர்வதன் ஊடாகவே வலுவிழந்தோரது வாழ்க்கையை வலுவுடையதாக்கமுடியும். அரசியலைப் பொறுத்தவரையில் இன்று அரசாங்கத்திலும் புலிகள் இயக்கத்திலும் குறைகளும் தவறுகளும் உள்ளன. இதனால், யுத்தம் மீண்டும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது - என்றார். (ஒ-12)

## 500 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு,மார்ச்10

இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 500 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா நிவாரணம் இம்மாதத்தில் முதற் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

வங்கிகள் மூலமாக இவற்றை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் எம். பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.(ஒ-152)

# கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் 22 பேருக்கு பாராட்டு விழா

அரியாலை,மார்ச்10

யாழ்ப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்கம் நடத்தும் சேவை நலன் பாராட்டு விழா நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் சங்கத்தின் நலன்புரிச் சங்க தலைவர் பரா.சாந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சங்கத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்வார்.

நலன்புரிச் சங்க பொருளாளர் நா. குமணதாசன் வரவேற்புரையை நிகழ்த்துவார்.சங்கத்தின் பொதுமுகாமையாளர் மு.தெய்வேந்திரம், சங்கத்தின் உபதலைவர் பெ.ஜேக்கப், இயக்குநர் சபா.தியாகராஜா நலன்புரிச் சங்க உபதலைவர் சி.அன்னராசா ஆகியோர் பாராட்டுரைகள் நிகழ்த்துவர்.

சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்ற 22 பணியாளர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கப்படும்.

பாராட்டுப்பெறும் பணியாளர்கள் விவரம் வருமாறு:-

நா.கனகரத்தினம், பி.எஸ்.பாலச்சந்திரன், க.சு.அலெக்ஸாண்டர், சே.இம்மானுவேல், அ.கிட்டினன், பொ.இரத்தினேஸ்வரன், க.கனகலிங்கம், நா.பரஞ்சோதி, சு.நீக்கிலாப்பிள்ளை, ந.மகாலிங்கம், ந.மகேந்திரராசா, சி.பொன்னம்பலநாதன், த.கனகரத்தினம், ச.அல்பிரட், ஆ.குணபாலா, அ.குணம், ந. பொன்னையா, சி.பொன்னுத்துரை, சி.பத்மநாதன், ஆ.சிவசோமசுந்தரம், ச.சிவநாதன், திருமதி அ.அமலராணி. (ஜ-10)


விலை 14/-

# சுடர் ஒளி



## 16.03.2003 இதழில்

- சமாதானத்தில் புலிகள் கவனம் உதவி பெறுவதில் அரசு தீவிரம்
- எல்லைதாண்டும் மீனவர்களால் தொல்லை
- கூடாரத்துக்குள் தலை வைத்த ஒட்டகம்போல் குழப்பத்தை உண்டுபண்ணும் தரப்பினர்கள் - தேரடி
- குற்றங்களைத் தடுக்குமா தூக்குத் தண்டனை?
- இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தம் ஆனால், புலனாய்வுப் பணிகள் தீவிரம் - வடபுலம்
- வாஜ்பாயை நெருங்கும் ஜெயலலிதா வைகோவுடன் உறவாடும் கருணாநிதி
- வெளிநாட்டு மோகம் - நகைச்சுவை விருந்து

மற்றும் மதன் சித்திரத் தொடர்கதை, மசாலாமிக்ஸ், சினிமா, சிறுவர்பகுதி, கலையமுதம், விளையாட்டு, பெண், இணையத்தளங்களிலிருந்து உட்பட பல்வேறு ஆக்கங்கள்.

(C-26875)

# கிரிக்கெட் பற்றிய நூல்களை எழுதி கிரிக்கெட் வீரர்களைவிட சம்பாதிக்கலாம்




கிரிக்கெட் விளையாட்டின பைபிள் எனக் கருதப்படும் 'விஸ்டன்' சஞ்சிகை 1864இல் முதன் முதலாக பிரசுரிக்கப்பட்டு தொடர்ந்து ஆண்டுதோறும் வெளிவருகிறது. 2003ஆம் ஆண்டுக்கான அதன் வெளியீடு 140 ஆவதாகும். இந்நூல் குறித்தும் கிரிக்கெட் சம்பந்தமான வேறு நூல்கள் குறித்தும் இக கட்டுரை ஆராய்கின்றது. நிசானி திசாநாயகாவால் எழுதப்பட்டு 'லக்பிம' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

"ஆங்கிலமொழி ஸ்ரீலங்காவில் புழக்கத்தில் இருக்கும்வரை, நாட்டு மக்களுக்கு கிரிக்கெட் விளையாட்டில் உள்ள ஈடுபாடு அற்றுப்போய் விடப் போவதில்லை."

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் ஸ்ரீலங்காவுக்கு வழங்கிய அன்பளிப்புப் போன்றதான இப்பிரசித்தி பெற்ற விளையாட்டு தொடர்பாக கருத்து வெளியிட்ட 'லெனாட் வூல்ப்' என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், டெஸ்ட் கிரிக்கெட்டின் வரலாறு 1876 ஆம் ஆண்டுவரை நீண்டு செல்கிறது. 1876இல் ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 1876ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15, 16, 17 மற்றும் 19ஆம் திகதிகளில் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றது.

இருந்தபோதும், கிரிக்கெட் விளையாட்டு விளையாடுவதற்கு முன்னரே அந்த விளையாட்டுப் பற்றிய நூல்கள் வெளிவர ஆரம்பித்தன. 1876 ஆம் ஆண்டுக்கு முன்னரே கிரிக்கெட் விளையாட்டு உலக மக்களின் அபிமானத்தை பெற்றிருந்தமையே இதற்கான காரணமாகும்.

கிரிக்கெட் வரலாற்றின் ஆரம்பம் எனக் கருதப்படும் 1864ஆம் ஆண்டின் முதன்முதலாக கிரிக்கெட் விளையாட்டுப் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய 'விஸ்டன் கிரிக்கெட்டேர்ஸ் அல்மனக்' (Wisdom's Cricketer's Almanac) என்ற சஞ்சிகை வெளிவந்தது.

'கிரிக்கெட் விளையாட்டின் பைபிள் எனக் குறிப்பிடப்படும் இவ்வருடாந்த சஞ்சிகை ஆரம்ப ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவருவதுடன் 2003 ஆம் ஆண்டு வெளியான சஞ்சிகை 140 ஆவது சஞ்சிகையாக அமைகிறது. கிரிக்கெட் விளையாட்டுப் பற்றிய நூலொன்றினை எழுதியுள்ள 'நாலன் மெண்டிஸ்' என்பவர் 'விஸ்டன்' சஞ்சிகையே நீண்ட காலம் வெளியிடப்பட்டுவரும் கிரிக்கெட் சஞ்சிகை எனக் குறிப்பிடுகிறார்.

ஒவ்வோர் ஆண்டின் முன்பகுதியில் வெளியிடப்படும் இச்சஞ்சிகையில், அதற்கு முன்னைய ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள், உலகக் கிண்ணப் போட்டிகள் மற்றும் அவ்விதமான வேறு விசேட போட்டிகள், அவ்வருடத்தில் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் பற்றிய விவரங்கள், கிரிக்கெட் துறையில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள், கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் இணைந்து கொண்ட புதிய விளையாட்டு வீரர்கள், அவ்வருட இடைவெளியுள் காலமான கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் சட்ட விதிகளில் மாற்றங்கள் ஏதாவது செய்யப்பட்டிருப்பின் அவை பற்றிய விவரங்கள் எனப் பல விவரங்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஆரம்பம் முதல் வெளிவந்த 'விஸ்டன்' சஞ்சிகையின் 140 பிரதிகளும் ஒருவரிடம் இருக்குமானால் அவரிடம் கிரிக்கெட் வரலாறு முழுமையும் உள்ளதெனக் கருதமுடியுமென 'நாலன்' கூறுகிறார்.

இச்சஞ்சிகை குறிப்பிட்ட வருடத்தில் கிரிக்கெட்டில் அதி திறமை வெளிப்படுத்திய ஐந்து விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்து 'விஸ்டன் கிரிக்கெட் ரேர்ஸ் ஓப் த இயர்' (Wisdon Cricketer's of the Year) எனக் கௌரவிக்கிறது. அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணி வீரர்களான சிதத் வெத்தமுனி, அரவிந்த டி சில்வா, அர்ஜுண ரணதுங்க, சனத் ஜெயசூரிய மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கிரிக்கெட் பற்றிய இந்தச் சஞ்சிகை ஸ்ரீலங்காவில் பிரபல்யம் பெற்றிராத போதிலும், வெளிநாடுகள் பலவற்றில் இச்சஞ்சிகைக்குத் தனியான முக்கியத்துவம் கிடைக்கிறது. கிரிக்கெட் போட்டியைக் கண்டு ரசிக்க விரும்புவது போன்றே அது தொடர்பான விவரங்களை வாசித்து அறிந்துகொள்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவதால் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பான புத்தகங்களுக்கு இந்நாடுகளில் பெரும் கிராக்கி உள்ளது. அவ்வாறே கிரிக்கெட் பற்றி எழுதுவதாலும் அவ்வெழுத்தாளர் பெரும் பண வருவாய் தேடிக்கொள்ள வாய்ப்புண்டு.

கிரிக்கெட் விளையாட்டுப் பெற்றிருந்த முக்கியத்துவத்தை தற்போது கொஞ்சம் கொஞ்சமாக தொலைக்காட்சி ஒளிபரப்பு பெற்று வருகிறது. எவ்வாறாயினும், மேற்கத்தைய நாடுகளில் இன்றும் கிரிக்கெட் விளையாட்டிற்கு குறிப்பிடத்தக்க வரவேற்புள்ளது. கிரிக்கெட் தொடர்பான நூல்களுக்கு சில நாடுகளில் பெரிய அளவிலான விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளன. கிரிக்கெட் வீரர்கள் தமது வாழ்க்கை வரலாற்றை சுயசரிதமாக எழுதுவதன் மூலம் கிரிக்கெட் விளையாடுவதால் பெறும் வருமானத்தைப் போன்று வருமானம் பெற்றுக்கொள்ள இயலுமெனத் தெரிந்து கொண்டுள்ளதால் அவ்விதம் நூல்கள் எழுதுவதில் ஈடுபட்டிருக்கின்றனர்" என நாலன் விவரிக்கிறார்.

இவ்விதம் கிரிக்கெட் வீரர்கள் தமது சுயசரிதத்தைத் தாமே எழுதியுள்ளனர். சிலர் வேறு எழுத்தாளர்களுடன் இணைந்தும் நூல்களை எழுதியுள்ளனர். விவியன் றிச்சர்ட்ஸ், இயன் பொதம், டொனால்ட் பிறட்மன், சேர் ஹாபில்ட் சோபர்ஸ், இம்ரான்கான், சாகிர் அப்பாஸ், சுனில் கவஸ்கர், சச்சின் டெண்டுல்கர் மற்றும் கபில்தேவ் ஆகியோர் தமது சுயசரித நூல்களை எழுதி வெளியிட்ட பிரபல்ய கிரிக்கெட் வீரர்களாவர்.

ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரையில் 'றிரையர்ட் ஹேர்ட்' (Retired Hurt) என்ற பெயரில் ரொஷான் மகாநாமவும் 'மை ஓடோபையகிரபி' (My Autobiography) என்ற பெயரில் அரவிந்த டி சில்வாவும் தமது சுயசரிதத்தை வேறு எழுத்தாளர்களுடன் இணைந்து எழுதி வெளியிட்டுள்ளனர்.

இவ்விதம் சுயசரிதை நூல்களை எழுதி வெளியிட்ட கிரிக்கெட் வீரர்கள் யாவரிலும், கிரிக்கெட்டில் புகழ் வாய்ந்த வீரரான 'சேர் டொனால்ட் பிரட்மனே' அதிக அளவிலான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் வீரர்கள் மட்டுமல்ல, கிரிக்கெட் நடுவர்களும்கூட நூல்களை எழுதியுள்ளனர். அண்மைக் காலத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் நடுவரான 'டரல் கெயர்' எழுதிய நூல் கடும் விமர்சனங்களுக்குள்ளான நூலாக அமைந்தது.

கிரிக்கெட் தொடர்பாக வெளிவந்த நூல்களில் கிரிக்கெட் துறையில் பெரும் விமர்சனங்களைத் தோற்றுவித்த நூலாக டரல் கெயரின் நூலைக் குறிப்பிடலாம். இந்நூலில் ஸ்ரீலங்கா வீரர் முத்தையா முரளீதரனின் பந்து வீச்சு சட்டதிட்டங்களுக்கு அமையாததென மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்நூலில் முரளீதரனின் பந்து வீச்சுப் பற்றிக் குறிப்பிடுவதற்கு ஒரு அத்தியாயமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் டரல் கெயருக்கு அபராதம் விதிக்க நேரிட்டது. அதுபோன்று ஒரு சமயம் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணியினர் தாம் கலந்துகொள்ளும் போட்டிகளில் டரல் கெயர் நடுவராகப் பணியாற்றுவதை ஆட்சேபிக்க நேர்ந்தது. கிரிக்கெட் வரலாற்றில் பெரும் குழப்ப நிலையைத் தோற்றுவித்த சந்தர்ப்பமாக இது அமைந்தது.

கிரிக்கெட் வரலாற்றில் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளின் போது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இப்போட்டிகள் ஆரம்பமாவதற்குச் சில தினங்கள் முன்பாக தென்னாபிரிக்க அணி வீரர் 'ஹாசல் ஹிப்ஸ்' தமது சுயசரித நூலை வெளியிட்டமையால் உருவானதே அச்சிக்கலாகும்.

**தமிழில்: வியெஸ்ரி**

அண்மையில் விமானவிபத்தில் பலியான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் 'ஹன்சி குறேன்சே' யே சிறந்ததொரு அணித்தலைவரென 'ஹாசல் ஹிப்ஸ்' அந்நூலில் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு தனது அணியின் தற்போதைய தலைவரான 'ஷோன் பொலக்' பற்றியும் அதில் விமர்சிக்கப்பட்டிருந்தார். தற்போது தென்னாபிரிக்க அணி தாம் கலந்துகொண்ட போட்டிகளில் தோல்விகளைத் தழுவியுள்ளது. அந்நூலில் அணித் தலைவர் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விமர்சனங்களால் அவ்அணியினுள் பெரும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகத் தெரியவந்துள்ளது.

கிரிக்கெட் வீரர்களால் தமது அனுபவங்கள் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களில் எமது நாட்டு வீரர் 'அரவிந்த டி சில்வாவினால் எழுதப்பட்ட புத்தகமே மிகவும் ரசனை கொண்டதாயுள்ளதென்பது இதுவரை இவ்வகையான பல புத்தகங்களை வாசித்துள்ள 'நாலனி'ன் அபிப்பிராயமாகும். விசேடமாக 1996 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் பற்றிய தம் அனுபவங்களை புதுமையான வகையில் அப்புத்தகத்தில் அரவிந்த டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் இந்நூல் இடம்பெற வேண்டுமாயின் அது ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்படல் அவசியமாகும்.

கிரிக்கெட் வீரர்களின் சுயசரிதை நூல்களில் ஆகக் கூடிய அளவில் விற்பனையான நூல் 'இயன்பொதம்' எழுதிய 'பொதம் - மை ஓடோபயகிறபி' (Botham - My Autobiography) என்ற நூலாகும். விவியன் றிச்சர்ட் எழுதிய தனது சுயசரிதை நூல் போன்றே, இந்திய நாட்டினுள் சுனில் கவாஸ்கரது சுயசரிதை நூலுக்கும் பெரும் கிராக்கி உள்ளது.

விமர்சனங்களுக்கு உள்ளான மற்றொரு கிரிக்கெட் தொடர்பான நூல் 'ஹன்சி குறோன்சே' ஆதார நிதிக்கு உதவும் பொருட்டு 'டியோன் ஹவுஸ்' (DEON GOUWS) என்பவரால் எழுதப்பட்ட 'அன்ட் நதிங் பற் த றுத்' (And Nothing but the truth) என்ற நூலாகும்.

'விஸ்டன்' சஞ்சிகைக்கு மேலதிகமாக கிரிக்கெட் தொடர்பான அதிக அளவு நூல்களை வெளியிட்டது இங்கிலாந்து நாடே என்ற போதும், அண்மையில் 'பிரட்மன் யுகம்' என்ற பெயரில் கிரிக்கெட் தொடர்பான தமது இரண்டாவது நூலை வெளியிட்டதன்மூலம் நம் நாட்டு கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளர் 'பிறேமசர அபசிங்க'வும் கிரிக்கெட் எழுத்தாளர்களின் பட்டியலில் இணைந்துகொள்கிறார்.

கிரிக்கெட் வீரர்கள் பற்றி மட்டுமல்ல, கிரிக்கெட் விளையாட்டு மற்றும் அதற்குரிய சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. குறிப்பிட்ட சில கிரிக்கெட் வீரர்கள் தாம் பங்கேற்ற கிரிக்கெட் போட்டிகளின் பின்னர், அப்போட்டிகளில் தாம் பெற்ற அனுபவங்கள் தொடர்பாக நூல்களை எழுதியுள்ளனர். இவற்றில் சில அவ்வேளைகளில் பெரும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளன.

கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளடங்கிய இரசனைமிக்க நூலாக றிசிபோனே மற்றும் பிராங் பொறல்ஆகியவர்களது நூல்களை பிறேமசர அபசிங்க குறிப்பிடுகின்றார்.

அதேபோன்ற பெரும் இரசனை மிக்கதொரு நூல் இந்தியாவைச் சேர்ந்த 'ராஜன் பாலா' என்ற எழுத்தாளரால் எழுதப்பட்ட 'ஓல் பியூட்டிபுல் போய்ஸ்' (All Beautiful Boys) என்ற நூலாகும். ஸ்ரீலங்காவில் இதுவரை உருவான விசேட திறன் கொண்ட ஆட்டக்காரர் என கருதப்படுபவர் கிரிக்கெட் வீரர் சதாசிவமாகும் என பிறேமசர அபசிங்க விபரிக்கிறார்.

கிரிக்கெட் வரலாறு பற்றிக் கூறும்போது தமது நீண்டகால அனுபவங்களைக் கொண்டு பிறேமசர அபசிங்க தெரிவிக்கும் கருத்து இக்கட்டுரையைப் பூர்த்திசெய்யப் பொருத்தமாயிருக்கும் என எண்ணுகின்றேன்.

"கிரிக்கெட் விளையாட்டுப் பற்றி எழுதுவதற்கு கிரிக்கெட் வீரர்தான் வேண்டுமென்றில்லை. கிரிக்கெட் விளையாட்டை உளப் பூர்வமாக நேசித்தால் அது போதுமானதாகும்."

---

### பருத்தித்துறை பிரதேச சபையின்

# 'பிக்கப்' வாகனத்தை மீள ஒப்படைக்க உதவுமாறு பொலீஸாரிடம் முறைப்பாடு!

வடமராட்சி,மார்ச்10

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தை சபைக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபையின் செயலாளரும் ஆணையாளருமான அ.அ.நடராசா பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது சபைக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனத்தை எமது சபையின் தலைவராகப் பணியாற்றியவரும் ஈ.பி.டி.பியின் மந்திகைக் காரியாலயத்தில் வசித்தவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் பயன்படுத்தி வந்தார். கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதிக்குப் பின் னர் அவர் சபை நடவடிக்கை எதிலும் கலந்து கொள்ளவில்லை. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதியிட்ட கடிதம்மூலம் தான் சுகவீன முற்றிருப்பதாகவும் மூன்று விடுமுறை வழங்குமாறும் கொழும்பிலிருந்து கேட்டிருந்தார்.

இம்மூன்று மாத கால எல்லையினுள் சபை காலாவதியானதால் சபைக்குச் சொந்தமானதும் தலைவர் பாதுகாப்பில் இருந்ததுமான பிக்கப் வாகனத்தை சபையிடம் மீள ஒப்படைக்கும்படி மூன்று கடிதங்கள் மூலம் அவர் விடுமுறைக்கு விண்ணப்பித்த 121,பூங்கா வீதி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அறிவித்தோம்.

இதன்பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு தான் இந்தியாவிலிருப்பதாகத் தெரிவித்தார்.

அவ்வேளை, குறிப்பிட்ட பிக்கப் வாகனம் பற்றி அவரிடம் விசாரித்தேன். தான் சுகவீனமுற்றதால் கொழும்பு செல்லும்போது வாகனப் பாதுகாப்புக் கருதி அதை தமது கட்சியின் யாழ்.தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்துச் சென்றதாகவும், தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு வாகனத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும் தெரிவித்தார். அதற்கமைய ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளரிடம் தமது அலுவலகத்தில் பிக்கப் வாகனத்தை ஒப்படைக்குமாறு கோரினேன். அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அத்துடன் இது குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தேன். இதுவரை அந்த பிக்கப் வாகனம் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை.

ஆகவே இவ்விவரங்களை ஆராய்ந்து குறிப்பிட்ட பிக்கப் வாகனம் எமக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-173)

---

### பாடசாலை அதிபர்களுக்கான

# செயலாற்றுகைத் தரங்கணிப்பு இந்த வருடம் முதல் நடைமுறை

மண்டைதீவு,மார்ச்10

இந்த வருடத்தில் இருந்து பாடசாலை அதிபர்களுக்கான செயலாற்றுகைத் தரங்கணிப்பு முறை மனித வள, அபிவிருத்தி கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இருந்து ஆசிரியர்களுக்கான 'செயலாற்றுகைத் தரங்கணிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் செயற்றிட்டத்துக்கு அமைவாக ஆசிரியர்களது வருடாந்த சம்பள ஏற்றம் மற்றும் பதவி உயர்வுகள் நடைமுறைப்படுத்த இந்த ஆண்டில் ஏற்பாடுகள் முழுவீச்சில் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல அதிபர்களது சம்பள உயர்வு, பதவி உயர்வுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த நடைமுறைக்கமைய பாடசாலை அதிபர்கள் வருடந்தோறும தாம் அமுலாக்க உத்தேசித்திருக்கும முகாமைத்துவம், நிர்வாகம், நிதிநிர்வாகம், அபிவிருத்தி தொடர்பாகத் தங்களோடு தொடர்புடைய வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும்.

ஒப்பந்தத்திற்கேற்ப கடமைகளை நிறைவேற்றும் அதிபர்களது சேவை திருப்தியான தரங்கணிப்பாளர்கள் உறுதிப்படுத்துவதே அதிபர்களின் சம்பள உயர்ச்சியை சிபாரிசு செய்யக்கூடியதாக அமையும்.

தரங்கணிப்பாளர்களாக சகல கல்வி வலயங்களிலும் உள்ள கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உலக வங்கியின் வழிகாட்டலின கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டம் தனியார் துறையின் சாயலைக் கொண்டிருப்பதாக ஆசிரியர் சங்கங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

எதிர்காலத்தில் இலங்கையின் இலவச கல்வித் திட்டத்தை தனியார் மயப்படுத்துவதற்கான நடவடிக்கையாக இது அமையக்கூடுமோ என்ற ஐயம் கல்வி வட்டாரங்களில் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-83)

# மீனவர் பிரச்சினை குறித்து பேச அமைச்சர் மஹிந்த இந்தியா பயணம்!

இலங்கை - இந்திய மீனவர் மத்தியில் தோன்றியுள்ள முறுகல் நிலையைச் சீர்செய்யும் பொருட்டு இலங்கை கடற்றொழில் அமைச்சர் மஹிந்த விஜயசேகர இந்திய அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிப்பதால் இலங்கை மீனவர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமையால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இந்த நிலைமை நீடித்தால் இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு பாதிப்படையலாம் என்பதாலேயே இப்பிரச்சினையை விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு விரைவில் இந்தியா சென்று பேச்சு நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

## மரண அறிவித்தல்கள்

### பிலிப் மத்தியூஸ்

*(முன்னாள் அச்சக ஊழியர்)*

யாழ்ப்பாணம், புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியைச் சேர்ந்த பிலிப் மத்தியூஸ் 05.03.2003 புதன்கிழமை மடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப் மாணிக்கத்தம்பி (மேஸ்திரியார்) - அடைக்கலமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் கருணாகரியின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்ற விநோதினி மற்றும் ஜெயந்தினி, அமுதினி, றூபனா, ஜெலாரியஸ் (யாழ்.பல்கலைக்கழகம் - முகாமைத்துவம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீக்கிலஸ் (செல்லம்ஸ்), காலஞ்சென்ற பிரான்சீஸ், காலஞ்சென்ற மேரிறோஸ் மற்றும் மேரிதிரேஸ், அன்ரனிப்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சாள்ஸின் (ஆசிரியர் - கருங்கண்டல் ம.வித்தியாலயம்) அருமை மாமனாரும் கெப்ரியா, சாரோணியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 06.03.2003 வியாழக்கிழமை மாலை மடுக்கோவில் சேமக்காலையில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மலரகம்', வளன்புரம்,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பி.நீக்கிலஸ்
(சகோதரன்).

### கந்தையா மனோன்மணி

இல.38, சின்னாலம்கண்டு வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் 178, கண்டி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோன்மணி 06.03.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் திலகவதி, காலஞ்சென்ற கிருஸ்ணவேணி மற்றும் தேவராசா (கனடா), சிறிரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசம்மா, செல்வரத்தினம், அன்னலச்சுமி, கனகாம்பிகை, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சபாரத்தினம் (இளைப்பாறிய தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகஸ்தர்), பாலசுந்தரம், தர்மராசா (யாழ்.கல்வி வலயம்), பாஸ்கராதேவி (கனடா), இராசமணி, இந்துராணி (கனடா) ஆகியோரின் மாமியாரும் பரஞ்சோதி (சேதா), முத்துராசா, கனகசிங்கம், காலஞ்சென்ற இராசையா, இராசம்மா, நடராசா ஆகியோரின் மைத்துனியும் வசந்தி (கொலன்ட்), ஆனந்தி, வசந்தகுமார், திலீப்குமார் (பிரான்ஸ்), பாலறூபா (ஜேர்மனி), பாலறஜி (ஜேர்மனி), பாலஜெயா (லண்டன்), பாலசிறிக்கா, பாலசுகிர்தா, தாரணி, சஜிபன், நிலானி, பிரவீன், சிந்துஜா, நிசாந்தன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும் சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பரமநாதன் (முதியோர் இல்லம், கைதடி) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (10.03.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இறுதிக்கிரியை நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*178, கண்டி வீதி,*
*அரியாலை.*

(15473)

தகவல்:
க.தேவராஜா (மகன்).

# பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பத்திரிகையாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலீஸாரினால் கடுமையான தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படுவது குறிதது விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். இதுதொடர்பாக -

பருத்தித்துறைப் பொலீஸ் இன்ஸ்பெகடர் கே.சி.ஹப்பு ஆராய்ச்சி பத்திரிகையாளர் திருச்செல்வத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து திருமண வைபவம் ஒன்றிற்காக குடும்பத்துடன் கொழும்பு சென்ற வேளையில் விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவுக்கு உதவினார் என்றும் விடுதலைப் புலிகளின் சிற்றூரவைத் தலைவராகச் செயற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு வெள்ளவத்தையில் வைத்து இவர் 2001ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டிருந்தார். சுமார் 3 மாதங்களின் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை, நெல்லியடி மற்றும் மானிப்பாய் பகுதிகளில் படையினரால் செய்தியாளர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக் குழு அமைக்கப்பட உள்ளதாக அரச தகவல் திணைக்களம், யாழ்.அரச அதிபருக்கும், யாழ் ஊடகவியலாளர் சங்கத்தினருக்கும் அறிவித்துள்ளது. (ஒ-12-173)

# பிரதேச மக்களின் கருத்துப்படியே அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறை

## உலக வங்கிக்குழு கல்முனை கூட்டத்தில் அறிவிப்பு

கல்முனை,மார்ச்10

கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, அதனடிப்படையிலேயே நடைமுறைப் படுத்தப்படும்.

- இவ்வாறு உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீட்டர் கறோஸ் கடந்த வெள்ளியன்று கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உலக வங்கி பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் இங்கு விஜயம் செய்தது.

கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எம்.எம்.பளீல தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர் திகாமடுல்ல மாவட்ட எம்.பி.அன்வர் இஸ்மயிலும் கலந்துகொண்டு உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் பல ஆலோசனைகளை முன்வைத்தார்.

இப்பிரதிநிதிகள் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், சாய்ந்தமருது போன்ற இடங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் லயன்ஸ் கழக ஆரம்ப உறுப்பினரும் 2001/2002 இன் தலைவரும் இன்றைய இயக்குநர் சபையில் IMM, Pass President ஆக கடமையாற்றியவருமான

**வேலுப்பிள்ளை சின்னத்துரை J.P.**

அவர்கள் இயற்கை எய்தியமையால் பிரிவுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரைப் பிரர்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழக உறுப்பினர்கள்,
உரும்பிராய்.

(C/26872)

### யாழ்.மாவட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளின் கவனத்துக்கு!

அகில இலங்கை பாடசாலைகளின் கிரிக்கெட் சங்க செயலாளர் பி.எஸ்.பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான (01.01.1987இற்கு பின் பிறந்தவர்கள்) கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது. இதற்காக பாடசாலை கிரிக்கெட் அணிகளை பதிவு செய்யும் நிகழ்வு ஒழுங்குகள் எதிர் வரும் 19ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கு வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் விளையாட்டு பொறுப்பாசிரியர்களையும் ஓட்ட பதிவினர்களையும் பயிற்றுநர்களையும் சமுகந்தரும்படி கேட்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கிரிக்கெட் இயக்குநர் பந்துல வர்ணபுர அறிவித்துள்ளார்.

### விளையாட்டு செய்திகள்

வலி.வடக்கு,மார்ச்10

யாழ்மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

சாவச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் புனித யோசப் மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி.(ஒ-86)

★ ★ ★

குருநகர்,மார்ச்10

யாழ்.புனித றோக்ஸ் றோ.க வித்தியாலய மெய்வன்மை போட்டி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புனித றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்மறைக்கோட்ட முதல்வர் வண.பிதா கலாநிதி எம்.ஏ.பி. ஆர். சௌந்தரநாயகம் அடிகள் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஒ-51)

### யாழ்.மாவட்ட சவாரிச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.மாவட்ட சவாரிச்சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது. இதில் தலைவர் உரை, வருடாந்த அறிக்கைகள் வாசித்தல் மற்றும் நிர்வாகிகள் தெரிவு என்பன இடம்பெறும். (ஒ)

### சிறகைகளால் நெல்வயல்கள் பருநாசம்!

கொடிகாமம்,மார்ச்10

தென்மராட்சி நெல்வயல்களில் 'சிறகை' பறவைகள் கூட்டமாக வந்து இறங்கி நெற்பயிர்களை நாசம் செய்கின்றன.

பருவகாலத்தில் வெளிநாடுகளில் இருந்து வரும் சிறகைப் பறவைகள் வயல்களில் இறங்கி நெல் மணிகளை உண்டு அழிக்கின்றன.

இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பறவையினம் நீண்ட காலமாக இங்கு காணப்படவில்லை தற்பொழுது தென்மராட்சிப் பகுதியில் கூட்டம் கூட்டமாக வந்துள்ளன.

சிறகை பறவைகளின் தாக்கம் மீசாலை, அல்லாரை, கச்சாய், விடத்தற்பளை, மிருசுவில் பகுதிகளிலும் பந்துவில், வரணி ஆகிய பகுதிகளிலும் கூடுதலாக உள்ளது. (ஒ-75)


## யாழ்: வைத்திய நிலையம்

**வைத்திய நிபுணர் ஆலோசனைப் பிரிவு**

இல.678, வைத்தியசாலை வீதி,
(O.L.R. Church இற்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

- பொது வைத்தியம் *(Medicine)*
- சத்திரசிகிச்சை *(Surgery)*
- மகப்பேற்று வைத்தியம்
  *பெண் நோயியல் (Gyn and obs)*
- என்பு முறிவு, நெரிவு *(Orthopaedric)*
- குழந்தைகள் வைத்தியம் *(Paediatric)*
- காது, மூக்கு, தொண்டை *(E.N.T.)*
- சரும நோய் வைத்தியம் *(Skin)*
- உள நல வைத்தியம் *(Psychatric)*
- நரம்பியல் சத்திரசிகிச்சை *(Nurosurgery)*
  *(இலவச வைத்திய நிபுணர்சேவை)*
- ஆய்வுகூட சேவை *(Laboratary)*

(ASIRI HOSPITAL, COLOMBO - 5 இன் அனுசரணையுடன்)

**JAFFNA MEDICAL CENTRE**
NO.678, HOSPITAL ROAD,
JAFFNA(*Near O.R.L. Church*)

**வெளிநோயாளர் பிரிவு**

*பிலிப் நேர்சிங் ஹோம்*

இல.228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

*இன்றுமுதல்*

- வெளிநோயாளர் பிரிவு - 24 மணித்தியால சேவை.
- நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறும் விடுதி வசதி.
- பல் மருத்துவப் பிரிவு (*வெகு விரைவில*)
- சத்திர சிகிச்சைக்கூடம் (*வெகு விரைவில*)
- ஆய்வுகூட சேவை

ASIRI HOSPITEL LTD, COLOMBO - 5
இன் அனுசரணையுடன்

**JAFFNA MEDICAL CENTRE**
**IN Philip Nursing Home**
No.288 Main Street, Jaffna.

(15474)

# செய் அல்லது செத்து...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வீச்சாளர்களையும் துடுப்பாளர்களையும் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

ஒரு காலத்தில் களத்தடுப்பு, பந்து வீச்சு, துடுப்பாட்டம் ஆகிய மும்முனைகளிலும் முன்னணியில் திகழ்ந்தது இலங்கை அணி. அதிலும் இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாளர்கள் தொடக்கம் நடு வரிசைத் துடுப்பாளர் வரை எதிரணி பந்துவீச்சாளர்களை அச்சுறுத்தியவர்களாகவே இருந்து வந்தனர். ஆனால், தற்போது ஒரு சிலரது துடுப்பைத் தவிர ஏனையோரது துடுப்புக்கள் சோடைபோய்விட்டன.

இன்றைய ஆட்டத்தில் அணியின் நடுவரிசைத் துடுப்பாட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அணியின் பந்துவீச்சைப் பொறுத்தவரை எவரும் குறைகூறுவதற்கில்லை. வாஸ், தில்ஹார, முரளி மற்றும் புலஸ்தி குணரட்ண ஆகியோர் தம்மாலான பங்களிப்பைச் செய்து அணியின் கௌரவத்தைக் காப்பாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அணியின் இன்றைய முக்கியத்துவத்தை உணர்ந்து ஆடவேண்டும். இந்தியா மீதான வெற்றிக்கு அது மிக முக்கியமானது.

இலங்கையோடு ஒப்பிடும்போது துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பவற்றில் இந்தியா ஒரு நல்ல நிலையில் இருக்கிறது. அவ்வணியின் முதல் 6 துடுப்பாளர்களில் ஒருவர் இல்லாது விட்டாலும் மற்றொருவர் அணியின் நிலையை உணர்ந்து நிதானமாக மட்டை வீசி அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றார்.

துடுப்பாட்டம், பந்து வீச்சு ஆகிய இரண்டிலும் இந்திய அணி பிரகாசிகின்றபோதும் களத்தடுப்பில் முன்பு போலவே படுமோசமாக உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கென்யாவுடன் நடைபெற்ற ஆட்டத்தில் அதனை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பிடிகள் மற்றும் 'ரன் அவுட்' செய்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அவற்றை கோட்டை விட்டனர் இந்தியர்கள். அதன்விளைவு கென்யாவுடனான அந்த ஆட்டத்தில் இறுதிவரை போராடி வெல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நிலை இன்றும் தொடருமாக இருந்தால் இந்தியர்களை கடவுள்தான் காக்க வேண்டும்.

கிரிக்கெட் விளையாட்டில் பெரும் அனுபவமில்லாத கென்யாவின் களத்தடுப்பு அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. அதன் காரணமாகத்தான இந்திய அணியின் முக்கிய பீரங்கிகளான சச்சின், ஷேவாக் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் 'பெவிலியன்' திரும்பச் செய்ய அந்த அணியால் முடிந்தது.

அந்த குட்டி நாட்டின் களத்தடுப்பு, வியூகத்தை நல்லதொரு பாடமாகக் கொண்டு இந்தியா செயற்படுவது அவசியம்.

அதுமட்டுமல்லாது, இந்திய அணியில் உள்ள பலரும் நாட்டு நன்மை கருதிவிளையாடாது தமது தனிப்பட்ட நலனில் பெரும் அக்கறை கொண்டு விளையாடுவதாலேயே இந்திய அணி படுதோல்வி அடைந்து வருகின்றது என கிரிக்கெட் வர்ணனையாளர் பலராலும் புறம் கூறப்பட்டு வந்தது. அந்தக் குற்றச்சாட்டு மறுக்க முடியாத உண்மையாகவே இருந்தது.

இதேவேளை -

இதுவரை இவ்விரு அணிகளும் 75 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் ஆடியுள்ளன. 39 இல் இந்தியாவும் 29 இல் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. 7 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இறுதியாக நடைபெற்ற 5 ஆட்டங்களில் மூன்றில் இந்திய அணி வென்றது. 2 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன.

உலகக்கிண்ணத் தொடர்களில் இரு அணிகளும் 5 தடவைகள் மோதியுள்ளன. இவற்றில் மூன்று தடவை இலங்கையும் ஒன்றில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன. மற்றொரு போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது.

அதேவேளை, கடந்த வருட இறுதிப் பகுதியில் கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி கிண்ணக் கிரிக்கெட் ஆட்டத்தின் இறுதியாட்டத்தில் இவ்விரு அணிகளுமே மோதின.

இந்த இறுதி ஆட்டத்தில் வர்ண பகவான் செய்த திருவிளையாடலால இரண்டு நாள்கள் ஆட்டம் நடைபெற்றது. இந்த இரண்டு நாள்களிலும் முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை. மிகக் குறைந்த ஓட்டங்களுக்குள் அவர்களை கட்டுப்படுத்தினர் இந்தியர். அந்த ஆட்டத்தில் கிண்ணத்தைக் கைப்பறும் வாய்ப்பு இந்தியாவிற்கே அதிகம் காணப்பட்டது. இருந்த போதிலும் அன்றைய சூழ்நிலையில் வர்ணபகவான் இலங்கையருக்கு உதவிபுரிந்தார்.

இதனால் தமது சொந்த மண்ணில் அயல் நாட்டு அணியிடம் கிண்ணத்தை பறிகொடுக்கும் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து தப்பித்து கிண்ணத்தை பங்கிட்டுக்கொண்டனர் இலங்கையர்.

அதற்கு இன்று நடைபெறும் இலங்கையுடனான ஆட்டத்தில் இந்தியா வென்று பழி தீர்க்குமா?

**- வசந்தன்**

## பாக். அணியின்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சுற்றிலேயே வெளியேறி பாகிஸ்தான அதிர்ச்சி அளித்தது.

பைபஸ் மேலும் கூறுகையில், "பாகிஸ்தான் அணிக்கு உள்நாட்டுப் பயிற்றுநர் தேவை என்று நினைக்கின்றேன். சமீபகாலமாக பாகிஸ்தான் அணி சிறப்பாக விளையாடவில்லை. தனிப்பட்ட வீரர்கள் ஒரு சிலர் சிறப்பாக விளையாடியதால் பாகிஸ்தான் அணியின் மோசமான விளையாட்டு வெளியே தெரியாமல் இருந்தது. பாகிஸ்தான் அணியின் திறமையைப் பற்றித்தான் எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால், அணி என்பது அனைத்து வீரர்களின் கூட்டுமுயற்சியே" - என்றார்.

38 வயதான ரிச்சட் பைபஸ் கடந்த செப்ரெம்பர் மாதம் பாக்.அணியின் பயிற்றுநராக பதவியேற்றார். 1999ஆம ஆண்டிலும் அவர் பாக். அணி பயிற்றுநராகக் கடமையாற்றினார். (ம)

**காணி விற்பனைக்கு**

சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தில் (பல்கலைக் கழகத்திற்கு அண்மையில்) அமைந்துள்ள 4 பரப்பு சுற்றுமதில், கிணறு ஆகிய வசதிகளைக் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: 071- 320620

(15478)

## டெண்டுல்கர்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
"இந்த உலகக் கிண்ணத் தொடரில் நீங்கள் 4 அல்லது 5 சதங்களைக் குவிப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்" - என்று முரளி டெண்டுல்கரிடம் கூறியிருந்தார். அதற்குப் பதிலளித்த டெண்டுல்கர் "அதற்கு நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டுமே!" என்று கூறியதுடன் "நான் நினைக்கின்றேன் இந்தத் தொடரில் நீங்கள் 30 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவீர்கள்" என்றும் டெண்டுல்கர் தெரிவித்திருந்தார்.

இந்தத் தொடரில் ஏற்கனவே டெண்டுல்கர் ஓட்ட எண்ணிக்கையில் முதல இடத்தில் இருக்கின்றார். அவர் 474 ஓட்டங்களை இதுவரை குவித்துள்ளார். முரளி விக்கெட்டுக்கள் வீழ்த்தியோரில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். அவர் 7 ஆட்டங்களில் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவரது சகாவான சமிந்தவாஸ் மற்றும் மேற்கிந்திய வீரர் டிராகஸ் ஆகியோர் 16 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உள்ளனர். (ம)

**BARATHY**

கல்வி நிறுவனம்
சித்தன்கேணி

PHYSICS
R.குகன்

A/L 2004

அலகு ரீதியான மீட்டலும்
வினா - விடையும்
திங்கள் - செவ்வாய் 3.30 (ப.நே.)
ஆரம்பம் - 10 - 03 - 2003

(15484)

# இன்னும் ஏன்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இனி வரும் ஆட்டங்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் விறுவிறுப்பாகவும் நடைபெறப்போகின்றன. மஹேல தற்போது தன் திறனில் இல்லை (OUT OF FORM). அவரைச் சில காலத்துக்கு அணியில் இருந்து தூக்கிவிடுவது குறித்து பரிசீலனை செய்வதே சிறந்தது. இளம் வீரர்களான முபாரக், அவிஸ்க போன்றவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கிப் பார்க்கலாம்.

மஹேலவை அணியில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு ஜயசூரியவும் அரசியலும் காரணமாக இருக்கலாம். கிரிக்கெட்டை வைத்து அரசியலை நடத்தினால் உலகக்கிண்ண கனவை இலங்கை மறக்க வேண்டியதுதான்.

உலகக் கிண்ணத் தொடரிலும் சரி, வீபி கிண்ணத் தொடரிலும் சரி மஹேல துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்து வீச்சு எதிலுமே பிரகாசிக்கவில்லை. அவர் சகலதுறை வல்லுநர் என அணியில் சேர்க்கப்பட்டவர். இப்போது சகலதையும் கோட்டைவிட்டு நிற்கின்றார்.

மட்டையைச் சுழற்றியவாறு அணிநடையாக வரும் மஹேல, வந்த வேகத்தில் 'பெவிலியன்' திரும்புவது வாடிக்கையாகிவிட்டது.

நடந்துகொண்டிருக்கும் கிரிக்கெட உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை இரட்டை இலக்கங்களையே எட்டவில்லை மஹேல.

இவரை வளரும் நம்பிக்கை நட்சத்திரங்கள் என ஒருகாலத்தில் கூறப்பட்டது. ஆனால், இவர் தற்போது அணியில் இருப்பது அணிக்குப் பாரம்.

காலம் கடந்து ஞானம் வருவது போல ஜயசூரிய இனியாவது நல்ல முடிவை எடுப்பாரா? முடிவு அனேகமாக இன்று தெரியும்.

இலங்கையின் நடுவரிசைத் துடுப்பாட்டம் விரைவில் மீளக் கட்டியெழுப்பப்படவில்லையென்றால் வெற்றிகள் கனவில் மட்டுமே.

**- CRICKEY**

# யார் போடுவார்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணத்தால் மோதல் கொஞ்சம் பலமானதாக இருக்கக்கூடும். வெற்றியை மட்டும் ஆஸ்திரேலியர்கள் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

ஆஸ்திரேலியர்களுக்கு நிச்சயம் சவாலாக இருப்பார்கள் என எண்ணப்பட்ட தென்னாபிரிக்கர்கள் இப்போது தொடரில் இல்லை. இது தென்னாபிரிக்காவின் துரதிர்ஷ்டமா அல்லது ஆஸ்திரேலியர்களின் அதிர்ஷ்டமா? சொல்லத் தெரியவில்லை. ஆனால், மேற்கிந்தியாவிடமும் நியூஸிலாந்திடமும் தோற்றவர்கள் தென்னாபிரிக்கர்கள், இலங்கையையும் அவர்களால் இலகுவாக வெல்ல முடியவில்லை. அப்படியானால், தொடரில் இருந்திருந்தாலும் அவர்கள் ஆஸ்திரேலியாவை அச்சுறுத்தி இருப்பார்களா? இதற்கும் பதில் இல்லை. கிரிக்கெட்டில் எதுவும் எப்போதும் நடக்கக்கூடும்.

இப்போது அதெல்லாம் காலம் கடந்தாகி விட்டது. இனி யார், வெற்றியின் வெறி கொண்டு திமிரும் ஆஸ்திரேலியக் குதிரைக்குக் கடிவாளம் போடுவார்கள்? இந்தியாவும் டெண்டுல்கரும் அதனைச் செய்வார்களா? கென்யாவுடன் அவர்கள் ஆடிய ஆட்டத்தைப் பார்த்தவர்களுக்கு அந்த நம்பிக்கை இருப்பதாகப்படவில்லை.

இலங்கை; அவர்கள் அரையிறுதியை எட்டிப் பார்ப்பார்களா என்பதே கேள்விக்குறி. சிம்பாப்வேயும் நியூஸிலாந்தும் எந்த நம்பிக்கையையும் தரவில்லை. அப்படியானால் அணை போடப் போவது யார்?

**- PTP**

**VAசாட்டி வாழ்த்துகின்றோம்**

**திருமதி R.மனோகரன்**
*(கிராம சேவையாளர், J/342 வரணி)*

அவர்கள் கிராம சேவையாளர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன் மேன்மேலும் தொடர்ந்து சேவையாற்றி வாழ்வில் வளம்பெற்று உயர வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

செல்வா சனசமூக நிலையம்,
கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி. (15479)

**FORUT**

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு கணனி கற்கைகள் பிரிவு**

மேற்படி நிறுவனத்தில் எதிர்வரும் 18.03.2003 அன்று காலை 11.00 மணிக்கு Dip.in M.S.Office கணனி கற்கைகள் ஆரம்பமாகவுள்ளன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

SECRETARY
EXTERNALDEGREE COURSES
&
COMPUTER STUDIES UNIT

(C-26878)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்களான *பேராசிரியர் செ. கிருஷ்ணராசா* அவர்களின் பாசமிகு தந்தையார் *திரு. தம்பையா செல்லையா* அவர்களினதும் *கலாநிதி ப.புஷ்பரட்ணம* அவர்களினதும் பாசமிகு மாமனார்

**முத்தையா கார்த்திகேசன்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வரலாற்றுக் கழகம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*
(15483)
பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.

**ராஜா** யாழ்ப்பாணம்
11 வரை அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த
**இவள் வருவாளா** (தமிழ்)
10.30, 2.30, 6.30 மட்டும்
**U 571**
இரவு 9.30 மட்டும் 10-13 வரை
(C/26877)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந்த், அருண்பாண்டியன், மீனா நடித்த
**தேவன்** (தமிழ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே.)
"U-571"
(C-26838)

**லஷ்சுமி** இணுவில்
இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த
**பகவதி**
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த
**ஆதியபரஞ்சவ** (தமிழ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் 7.00 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம்
**M.2**
(சனிக்கிழமை, ஞாயிறு காட்சிகள் நிறைந்தது)
(15380)

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் நடேசன்

*(முன்னாள் C.T.B. நடத்துநர்)*

கோப்பாய், கிளுவானை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடேசன் 07.03.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் சந்தையா, சிதம்பரப்பிள்ளை, செல்லம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் முகுந்தன்(ஜேர்மனி), திருவேணி, நவீந்திரன்(நோர்வே), கௌரிவேணி ஆகியோரின் தந்தையும் திலகவதி, சுபாகரன் ஆகியோரின் மாமனாரும் றஜீவன், றட்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*
(15486)
தகவல்:
குடும்பத்தினர்.

## வைரமுத்து செல்வநாயகம்

*(இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள எழுதுவினைஞர்)*

நாச்சிமார் கோவிலடியை (கே.கே.எஸ்.றோட்) பிறப்பிடமாகவும் நல்லூர், நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்வநாயகம் அவர்கள் நேற்று (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வைரமுத்து யோகம்மா அவர்களின் மூத்த புதல்வரும் சாரதாம்பாள், காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பாள், சிதம்பரநாதன், சிவதாசன் மற்றும் சிவபாலன் ஆகியோரின் சகோதரரும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாவதி, தயாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பசுபதி, பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும் சுந்தரலிங்கம், மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் அனோசன், சங்கீதா, கேதர்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/4, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.*
(15485)
தகவல்:
து. பசுபதி (மருமகன்),
ச.சுந்தரலிங்கம் (மைத்துனர்).

## லயன் - வேலுப்பிள்ளை சின்னத்துரை

**(J.P., G.S.,** *இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிபதி, சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)*

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத்துரை 08.03.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சுதாகினி (ஆசிரியை, புத்தளம் ஸாகிரா பாடசாலை), சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் (புத்தளம் கல்விவலய கணித ஆசிரிய ஆலோசகர்), நளினி சிறியின் (லண்டன்) அன்பு மாமனாரும் நிவாஷினின் ஆசை அப்பப்பாவும், வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், ஓவசியர் இராமலிங்கம், சுந்தரம் தம்பதிகளின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*'கமலை'*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(C/26879)
தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

# இன நல்லுறவை ஏற்படுத்துவதற்காக இரவு பகல் பாராது உழைத்தவள் நான்!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்10

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாம் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னரே தமிழ்மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. பின்னர் நான் கிராமம் கிராமமாகச் சென்று தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனக்கூறிவந்தேன்.

அதிகாரத்துக்கு வந்த பின்னரும் இந்த உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காக நான் உண்மையாகவே முயற்சி செய்தேன். ஆனால், இன்று சமாதானம் பற்றிப் பேசுகின்றவர்கள் அன்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பிரபாகரனும் அதனை விரும்பவில்லை. என்னைக் கொலை செய்யவும் முயற்சி செய்யப்பட்டது. உயிரைத் துச்சமாக மதித்து நாட்டுக்காக செயற்படுகின்றவர் என்ற ரீதியில் இந்நாட்டின் சிங்கள், தமிழ், முஸ்லிம மக்களின் உரிமைகளுக்காகப் பேசுவதை நான் இன்னமும் விட்டுவிடவில்லை. இந்த நாட்டில் - உண்மையான - சமாதானத்துக்காக எதிர்காலத்திலும் எனது உயிரை அர்ப்பணித்து செயற்பட நான் தயாராக இருக்கின்றேன் என்றார் ஜனாதிபதி (ஐ-6)

---

### தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணமுடியாது. சமாதானப்பேசசுக்களின் மூலமாகவே அது முடியும்.

இருபது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்துக்கு உடனடியாக தீர்வு காணமுடியாது. கடந்த 5 மாதங்களாக பேச்சுக்கள் நன்றாகவே நடந்தன. இனி நடைபெறப்போகும் பேச்சுக்களும் பிரச்சினையின்றி நடைபெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அரசு மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்காது. தற்போதைய சர்வதேச அரசியல் சூழ்நிலை, இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச நாடுகளின் ஆர்வம் போன்ற காரணங்களினால் புலிகளும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் நிலை இல்லை.

தனிநாடு தவிர்ந்த எந்த விடயத்தையும் பேசுவதற்கு அரசு தயார் என்று புலிகளுக்கு தெரிவித்துள்ளோம். நாட்டைப்பிரிப்பதற்கு நாம் பேச்சு நடத்தவில்லை. இணக்கப்பாட்டின் அடிப்படையில் அதிகாரங்களை பகிர்ந்துகொண்டு எவ்வாறு செயற்பட முடியும் என்பது தொடர்பாகவே பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய கடமையை ஏற்றுள்ள படையினர், எந்நேரமும் உஷாராக இருக்கவேண்டும். உலகின் நவீன போக்கிற்கு ஏற்ப ஆயுதப் பயிற்சிகளைப் பெறவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்களில், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதிலும் அவர்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்வதிலும் இராணுவத்தினர் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

- என்று அமைச்சர் பீரிஸ் கேட்டுக்கொண்டார். (ஐ-6)

---

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் சந்திரபால, விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எஸ்.எழிலன், வவுனியா மாவட்டத்தின் நானகு பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் கிராமங்களாக 38 கிராமங்கள் இனங்காணப்பட்டிருக்கின்றன. இவற்றில் 15 கிராமங்களில் முதல் கட்டமாக மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தினால் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட தாண்டிக்குளம், நெய்வேலி, சிதம்பரம், பனிக்கன் புளியங்குளம் ஆகிய இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் இக்கூட்டத்தில் தெரிவித்தார். இந்த இடங்களில் மக்களை மீளக்குடிய மர்த்துவது என்றால் தாண்டிக்குளம் சோதனைச்சாவடியை இராணுவம் 24 மணிநேரம் திறந்துவைக்க வேண்டும் என்று எழிலன் கூறினார். அதற்கு மறுப்புத் தெரிவித்த இராணுவம், அதற்குப்பதிலாக அந்த மக்களுக்கு பாஸ் வழங்கலாம் என்று கூறியது பாஸ் நடைமுறையை மீண்டும் கொண்டு வருவதை எழிலன் ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்பகுதியில் மீளக்குடியமரும் மக்கள், தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பெயர் பதிவுசெய்து செல்ல முடியும் என்று இராணுவம் இறுதியில் தெரிவித்தது.

மீளக்குடியேறும் மக்கள் பெயர்களைப் பதிவுசெய்து 24 மணிநேரமும் பிரயாணம் செய்யமுடியும் என்றும் இராணுவம் தெரிவித்திருக் கின்றது. (ஐ-164-6)

---

### இலங்கைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகம் மீனவர்கள் குடும்பங்களுக்கு உறுதி அளித்திருந்தது.

அதன்படி, நேற்றுடன் கெடு முடிவடைந்துவிட்டதாக எச்சரித்துள்ள இராமேஸ்வர மீனவர்கள், இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று புகார் கூறியிருக்கிறார்கள்.

இதனால் தங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, கச்சதீவில் உள்ள அந்தோனியார் கோவில் திருவிழாவில் கட்டாயமகக் கலந்துகொள்வோம் என்று இராமேஸ்வரம் மீனவர்களும் அங்கு வாழும் கிறிஸ்தவர்களும் கூறியுள்ளனர்.

இதனால் கச்சதீவு மற்றும் இராமேஸ்வரத்தில் நேற்றும் பெரும் பதற்றம் நிலவியது.

இந்நிலையில், இலங்கைக் கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் தவறிப் போய் நுழைந்து விடக்கூடாது என்பதற்காக அப்பகுதிகளில் இந்தியக் கடலோரக் காவல் படை ரோந்துப் பணியைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப பட்டிருந்த 16 இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை போய்ச் சேர்ந்தனர்.

இந்த மீனவர்கள் மன்னார், அநுராதபுரம் மற்றும் கொழும்பு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

திருவனந்தபுரம் வழியாக விமானம் மூலம் சென்னை சென்ற அவர்கள், நேற்று இராமேஸ்வரத்திற்குக் கொண்டு செல்லப்படவிருந்தனர்.

---

### விநோதினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட தொலைபேசி அழைப்புகள் குறித்து இரகசிய விசாரணை துரிதமாக ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கொலையாளி அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் விரைவில் அந்த நபரைத் தாம் கைது செய்துவிடுவோம் எனவும் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரியான பொலீஸ் அதிபர் கேரத் தெரிவித்திருந்தார். பொலீஸ் மா அதிபர் ர.ஆனந்தராஜாவே இந்த கொலை விவகாரத்தில் துப்புத் துலக்குவதை நேரடியாகக் கண்காணித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அப்படியிருக்கையில், கொலையாளி பாதிக்கப்பட்டோருக்கு மரண அச்சுறுத்தல் விடுவது பொலீஸ் துறைக்கே பெரும் சவால் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தக் கொலை குறித்து விசாரித்துவரும் பொலீஸார், வன்செயல் கும்பல் ஒன்றின் பெரும் வலையையே அடையாளம் கண்டுள்ளனர் எனவும் விநோதினி திலீபனைக் கொலை செய்தவர் எந்நேரமும் கைதுசெய்யப்படலாம் எனவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

---

### ரஷ்யாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.ஜி.எல்.ஏ. மற்றும் ரஷ்யத் தயாரிப்பு ஆயுத வகைகளை வாங்குவதே குறிப்பிட்ட இலங்கையர்கள் இருவரினதும் நோக்கம். அவர்கள் இருவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்று பின்னர் அறியப்பட்டது.

உடனடியாக அவர்கள் உடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. அந்த இருவரில் ஒருவரின் பெயர் தங்கராஜா. அவரது கடவுச் சீட்டு இலக்கம் என்.டி.444392.

ரஷ்ய நாட்டினுள் புலிகளின் இந்தப் பிரசன்னம் குறித்து லாவோசியில் உள்ள ரஷ்யத் தூதரகம், அந்நாட்டுப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் புலிகள் வாங்க முயற்சித்ததாக கூறப்படும் ஏவுகணைகளின் திறன்கள் குறித்தும் தரவுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் கொழும்பிலுள்ள பாதுகாப்புத்துறை ஆய்வாளர்களை உசுப்பிவிட்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் முனைப்புப் பெற்றுள்ள இந்த வேளையில் புலிகள் இவ்வாறான நடவடிக்கைளில் ஈடுபடுவது ஏன்? அதிலும் விசேடமாக விமான எதிர்ப்பு ஏவுகணையில் அவர்கள் கவனம் செலுத்தியிருப்பது ஏன்? என்றெல்லாம் சுழியோடத் தொடங்கியுள்ளனர்.

இதில் சம்பந்தப்பட்டுள்ள ஐ.ஜி.எல்.ஏ. என்ற விமான எதிர்ப்பு ஏவுகணை புலிகளின் வசம் ஏற்கனவே உண்டு என்பதை இராணுவம் 1998 ஜூனில் உறுதிசெய்துகொண்டது.

'ஜயசிக்குறு' படை நடவடிக்கை மூலம் வவுனியா - கிளிநொச்சி ஏ-9 பாதையின் கணிசமான பகுதியை புலிகளிடம் இருந்து இராணுவம் மீட்ட காலப்பகுதியில், மன்னாரில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஐ.ஜி.எல்.ஏ. லோஞ்சர் ஒன்றும் அதற்குரிய இரண்டு ஏவுகணைகளும் மீட்கப்பட்டன. ஆனால், அவை பழைய ரகம். தற்போது தோளில் வைத்துத் தாக்கக் கூடிய நவீன ரக ஐ.ஜி.எல்.ஏ.ஆயுதம் ரஷ்யாவில் உள்ளது.

இதனையே புலிகள் முகர்ந்து வந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. இலங்கை விமானப்படை விமானத்துக்கு எதிராக அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. - என்றெல்லாம் கொழும்புப் பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

---

### செயலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாள மறியற் போராட்டம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

களுத்துறைச் சிறைச்சாலைகளிலும் ஏனைய சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள், தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது தம்மீதான வழக்கு விசாரணைகளை துரிதமாக்கவேண்டும் என்றுகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-6)

---

### குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மக்களும் வர்த்தகர்களும் தமது வங்கித் தேவைகளுக்கு பளையில் திறக்கப்படும் கிளையுடன் தொடர்புகொள்ளலாம் என்று தமிழீழ வைப்பகத்தின் நிதிமேலாளர் கோபால கிருஷ்ணன் தெரிவித்தார்.

பளையில் புதிதாகத் திறக்கப்படும் கிளையில் தேட்டக் கணக்கு, நிலையான வைப்புகள், நடைமுறைக் கணக்கு, அடகுக் கடன்சேவை, சிறுவர்களுக்கான 'அமுதம்' தேட்டத் திட்டம், வதியாதோருக்கான 'தாயக ஒளி' திட்டம், விவசாயிகளுக்கான கடன்கள், மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட வழமையான வைப்பக சேவைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ வைப்பகம் அதன் சேவைகளை ஏற்கனவே வன்னியில் விஸ்தரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கிளை புதுக்குடியிருப்பிலும், கிளிநொச்சிக்கான கிளை கிளிநொச்சி நகரப் பகுதியிலும், வைப்பகத்தின் ஊரகக் கிளை ஒன்று விசுவமடுவிலும், விரிவாக்கல் கிளை புளியங்குளம் பகுதியிலும் இயங்கி வருகின்றன.

இதேவேளை - தமிழீழ வைப்பக சேவைகளை ஒன்றிணைக்கும் நடுவப் பணியகம் கிளிநொச்சி திருநகரில் கடந்த வாரம் முதல் செயற்பட்டு வருகிறது. (ஐ)


## G.A.Q. பேராதனை 2003/2004

மேற்படி பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன. பதவு செய்ய விரும்பும் மாணவர்கள் 10.03.2003 இல் சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும். 50 (ஐம்பது) விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**பட்டப்படிப்புக்கள் கல்லூரி**
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(15315)

## தென்னிந்தியாவில் இருந்து



முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

**ராஜகுருசாமி** அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை.

**ராஜகுருசாமி**
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(15467)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : 23.03.2003
காலை 10.00 மணி

அனைத்து விதமான Diploma கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

புலமைப் பரிசில் திட்டத்தில் கல்வியாண்டு 2002/2003 இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்
IIS. யாழ்ப்பாணம்.

## பிரியங்கா
**போட்டோஸ் அன் வீடியோ புறடக்ஷன்**

3CCD டியிற்றல் வீடியோ அன் போட்டோ படப்பிடிப்பிற்கும் கொம்பியூட்டர் மூலம் மிக்சிங் மற்றும் போட்டோ சீர்திருத்த அலங்கரிப்பு வேலைகளுக்கும்



'சந்திர கிரி'
இல.63, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு தேவையான மிக்சிங் மற்றும் ஓடியோ பதிவுகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் செய்துதரப்படும்.

தேவை
*Photo shope*, கொம்பியூட்டரில் தமிழ் ரைப் செய்யத்தெரிந்தவர்கள் தேவை.
(15295)

## LIONAIR
**LANKA'S PRIDE IN THE SKY**

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.